வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

பக்கங்கள் : 16

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ———— ඊළනාඩු

19.02.2021 வெள்ளிக்கிழமை




# குடியுரிமை பறிபோகும் என்று ஒருபோதுமே அஞ்சவில்லை!



## சரத் பொன்சேகா அரசுக்கு சாட்டையடி

கொழும்பு,பெப்.19

எதிர்க்கட்சியை அடக்கி நாட்டைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டால் அதை மக்கள் தோற்கடிப்பர் என்று உறுதிபடத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, குடியுரிமை பறிக்கப்பட்ட அனுபவம் எங்களுக்கு உள்ளது. சிவில் உரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகளை இழக்க நாங்கள் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை என்றும் தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று 02



# கோட்டாபய அரசுக்கு எதிராக போராடுவோம்

## ஹக்கீம் அறைகூவல்

கொழும்பு, பெப். 19

நீதிக்கு புறம்பான வகையில் செயற்படும் இந்த அரசாங்கத்துக்கு எதிராக போராடுவோம் - என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், எம்.பியுமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:

அரசியல் பழிவாங்கலுக்காக முன்னணி 02

# கோட்டாபயவின் அரசு மீது கருணாவின் கட்சி காட்டம்

## தம்மைக் கவனத்தில் கொள்வதில்லை என்று பகிரங்கமாகக் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்ரவரி 19

நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்த தொல்பொருள் திணைக்கள வேலைகளைத் தற்போதைய அரசாங்கமும் முன்னெடுப்பதாக தமிழர் ஐக்கிய சுதந்திர முண்ணனியின் செயலாளர் வ.கமலதாஸ் குற்றம் சாட்டியுள்ளார். 02

# மன்னாரில் சிகையலங்கரிப்பு நிலைய உரிமையாளருக்கு கொரோனா உறுதி

யாழ்ப்பாணம்,பெப்.19

மன்னார் நகரில் சிகையலங்கரிப்பு நிலைய உரிமையாளருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் 291 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் 02

# இறுக்கமான நடைமுறை பின்பற்றமுடியாவிடின் யாழ். பல்கலை பட்டமளிப்பைப் பிற்போடுங்கள்

## துணைவேந்தருக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆலோசனை

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவை இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடத்துவதில் சிரமங்கள் ஏதாவது இருப்பின் நிகழ்வைப் பிற்போட்டு, கொவிட் 19 நிலைமைகள் சீரடைந்த பின் பிறிதொரு நாளில் நடத்தலாம் என வடக்கு மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் ஆலோசனை வழங்கியுள்ளார்.

யாழ். பல்கலைக் கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 24, 25 ஆம் திகதி 02




# எதிரணித் தலைவர்களின் குடியுரிமை பறிக்க முயற்சி

கொழும்பு, பெப். 19

தமக்கு சவாலாக அமைந்துள்ள எதிர்க்கட்சி அரசியல் பிரமுகர்களின் குடியுரிமையை பறிப்பதற்கு அரசாங்கம் முயற்சித்து வருகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் 02

# இருவேறு குற்றச்சாட்டுக்களில் கிளிநொச்சியில் 8 பேர் கைது

கிளிநொச்சி, பெப்.19

கிளிநொச்சி மாவட்டத்துக் குட்ட பகுதிகளில் இரு வேறு குற்றச்சாட்டுக்களில் 8 பேர் கைது செய்யப்பட்டனர் என கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி பகுதியில் 19 போத்தல் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி 02

# யாழ்.மாநகர மேயருடன் சுவிஸ் தூதுவர் சந்திப்பு

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனை இலங்கைக்கான சுவிற்சர்லாந்தின் புதிய தூதுவர் டொமினிக் பேர்கலர் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பு நேற்று பிற்பகல் யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் இடம்பெற்றது. 02

# என்னிடம் வாக்குமூலம் பெற்றது ஏன்? சபாநாயகரிடம் மனோ எம்.பி.கேள்வி

## பொலிஸ் மா அதிபருக்கு சபாநாயகர் கடிதம்

கொழும்பு,பெப்.19

நாட்டின் பல இடங்களில் நடைபெறும் போராட்டங்களுக்கு பெறப்படாத தடையுத்தரவுகள், பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில் கலந்துக்கொண்ட எம்.பிக்களுக்கு எதிராக மாத்திரம் குறிவைத்து பெறப்பட்டு, என்னிடம் இது தொடர்பில் பொலிஸ்துறை வாக்குமூலம் பெற்றது ஏன் என் 02

# பேரணியில் பங்கேற்று கைதான இளைஞன் 6 மணிநேர வாக்குமூலத்தின் பின் விடுதலை

யாழ்ப்பாணம்,பெப்.19

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் பங்கேற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞன் சுமார் 6 மணிநேரத்தின் பின் விடுவிக்கப்பட்டார்.

இளைஞனிடம் வாக்குமூலம் பெறப்பட்ட நிலையில் அவரின் தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த 26 வயது இளைஞனே நேற்று நண்பகல் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். 02

## கோட்டாபயவின்...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் நாட்டு மக்களுக்கு எதிராக செயல்படுவதாக முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முண்ணனியின் செயலாளர் வ.கமலதாஸ் குறிப்பிட்டார்.

கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற பின்னர் அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

தமிழர் ஐக்கிய சுதந்திர முண்ணனியின் வடக்கு மாகாண கிளையின் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. தமிழ் மக்களின் வாழ்க்கைத்தரம், பொருளாதாரம், போன்றவை தொடர்பாக அக்கறை கொள்ள வேண்டிய தேவை எமக்கு இருக்கிறது.

கடந்த தேர்தலில் மொட்டுச்சின்னத்திற்கு 42 ஆயிரம் வாக்குகளை திரட்டிக் கொடுத்த உறுப்பினர்கள் இங்கே உள்ளார்கள். மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிப்படி பல விடயங்களைச் செய்யமுடியாத இயலாத்தன்மை இந்த அரசில் காணப்படுகின்றது.

அத்துடன் பாராளுமன்றத்தில் மொட்டுச்சின்னத்தின் பிரதிநிதிகளாகப் பலர் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் எங்கள் கட்சி உறுப்பினர்களை கவனம் எடுக்காமல் இருப்பது கவலை அளிக்கும் விடயமாக இருக்கிறது. இவை தொடர்பாகவும் ஆராய்ந்தோம்.

இந்த அரசு தமிழர்களுக்கு எதிரான போக்கை மாத்திரமின்றி இலங்கை பிரஜைகளுக்கு எதிரான போக்குகளையும் முன்னெடுக்கிறதோ என்ற சந்தேகம் எமக்கு ஏற்படுகின்றது. தமிழ் மக்களின் காணிகளிற்குள் அல்லது அவர்களின் வளங்களுக்குள்ளே தொல்பொருள் ஆக்கிரமிப்பு, மற்றும் புத்தர் சிலைகளை நிறுவும் செயற்பாடுகள் நல்லாட்சி அரசின் காலத்திலேயே முன்னெடுக்கப்பட்டன. இந்த அரசிலும் அது தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றது. அதனை நாம் கவலையுடன் பார்க்கிறோம். இது எந்த அரசு என்பதை விட சிங்கள இனவாதிகளின் ஏகாதிபத்திய நிகழ்ச்சிநிரலிற்கான கட்டமைக்கப்பட்ட அணுகுமுறையாகவே காணப்படுகின்றது என்பது தான் என்னுடைய கருத்து.

கடந்த தேர்தலில் எமது கட்சி கோட்டபாயவின் வெற்றிக்காக உழைத்திருந்தது. அந்த நேரத்தில் நாம் வழங்கிய உழைப்புக்கான பிரதிபலன் எமக்கு கிடைக்கவில்லை. கோட்டபாய தன்னுடைய அரசியல் கடமையில் இருந்து தவறுகிறாரா என்ற சந்தேகம் எமக்கு இருக்கிறது.ஆனால் நாம் எமது முயற்சிகளைக் கைவிடவில்லை.

முப்பதாயிரத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற்றமையால் பிரதமர் மஹிந்த எமது கட்சித்தலைவர் கருணாவுக்கு ஒரு பதவியை வழங்கியுள்ளார். அந்தப் பதவிக்குள் கட்டுப்பட்டவராக அவர் அரசியலை முன்னெடுக்க முடியாது அரசின் கொள்கைத் திட்டங்களை முன்னெடுப்பவராக அங்கே கடமையாற்றிக்கொண்டிருக்கிறார்.

ஆனால் எமது கட்சி பிரதமருடன் எந்த உடன்படிக்கையும் செய்யவில்லை. தமிழர்களுடைய தீர்வுத்திட்டத்துக்கான ஒற்றுமையை உருவாக்குவதென்ற அடிப்படையில் எமது கட்சியின் கொள்கை உள்ளது-என்றார்.

## எதிரணித்...

இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை இன்னும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை. இதற்கிடையில் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. தமது தேவையை நிறைவேற்றிக்கொள்வதற்காகவே இவ்வாறு இழுத்தடிப்பு இடம்பெறுகின்றது.

நேர்வழியில் அரசியலில் மோதமுடியாததால்தான் குறுக்குவழியில் அரசாங்கம் பயணிக்க பார்க்கின்றது. அதற்கு எதிராக நாம் போராடுவோம்-என்றார்.

## இறுக்கமான...

களில் நடைபெறவுள்ள நிலையில், பட்டமளிப்பு நிகழ்வை கடுமையான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடத்துமாறு கோரி, அந் நடைமுறைகளைப் பட்டியலிட்டு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரனின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் வருமாறு:

நாட்டில் எழுந்துள்ள கொவிட் 19 பரவல் அபாயத்தை அடுத்து, பரவலைத் தடுக்கும் வகையில் பொது நிகழ்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அதன் அடிப்படையில், இந் நிகழ்வு பற்றி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடனும், தொற்று நோயியல் பிரிவின் தொற்று நோயியல் நிபுணருடனும் நாம் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின், பின்வரும் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒரே அமர்வில் பங்குபற்றுபவர்களின் ஆகக் கூடிய எண்ணிக்கை 150 ஆக மட்டுப்படுத்தப்பட வேண்டும். அதற்கேற்ற வகையில் அமர்வுகள் மீள் பட்டியலிடப்பட வேண்டும். மாணவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், நண்பர்கள் உட்பட வேறு எவரும் பல்கலைக்கழக வளாகத்தினுள் அனுமதிக்கப்படக் கூடாது.

முன்னைய அமர்வில் பங்குபற்றிய வர்கள் வெளியேறிச் சென்ற பின்னர் மட்டுமே அடுத்த அமர்வுக்கு உரியவர்கள் மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட வேண்டும்.

மாணவர்கள் தங்களுடன் தனிப்பட்ட படப்பிடிப்பாளர்களை அழைத்து வருவதற்கு அனுமதிக்கப்படக் கூடாது.

ஒவ்வொரு அமர்வின் போதும், மண்டபத்தினுள் நுழையும் சகலரது பெயர், பாலினம், வயது, தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி, தொடர்பு இலக்கம் உட்பட்ட விபரங்கள் மண்டப நுழைவாயிலில் வைத்துப் பதிவு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு அமர்வின் முடிவிலும் பதிவு செய்யப்பட்ட அந்தந்த அமர்வுக்குரிய விபரங்களை நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியிடம் கையளித்தல் வேண்டும்.

ஒவ்வொரு அமர்வின்போதும், மண்டபத்தினுள் நுழையும் சகலருக்கும் உடல் வெப்பநிலை பரிசோதிக்கப்பட்டு, காய்ச்சல் போன்ற நோய் நிலைகள் காணப்படின் அவர்கள் மண்டபத்தினுள் நுழைய முடியாதவாறு தடை செய்யப்பட வேண்டும்.

மண்டபத்தினுள் நுழையும் சகலரும் தமது கைகளைக் கழுவுவதற்கான வசதிகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் ஏற்படுத்துவதுடன், ஒவ்வொருவரும் கைகளைக் கழுவிய பின்னர் உள் நுழைவதை உறுதிப்படுத்துவது பல்கலைக்கழக நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

மண்டபத்தினுள் முகக்கவசம் அணிந்து உள் நுழைவதையும், தொடர்ந்து அணிந்திருப்பதையும் உறுதிப்படுத்துவது நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

இரண்டு நபர்களுக்கிடையிலான சமூக இடைவெளியாக ஒரு மீற்றர் தூரம் பேணப்படுவதை உறுதி செய்வதும் நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

நிகழ்வு இடம்பெறும் சுற்றாடலில் உள்ளும், வெளியும் உணவுப் பொருள்கள், நீராகாரங்கள் எந்தவொரு வடிவத்திலும் கையாளப்படுவதற்கு அனுமதியளிக்கப்படக் கூடாது.

மேலதிகமாக நிகழ்வுக்கு முறையான அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் வகையில் நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியிடம் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

அனுமதிக்கு மேலதிகமாக, நிகழ்வைத் திட்டமிடும் போதும், நிகழ்வின் போதும் நல்லூர் பிரதேச வைத்திய அதிகாரியின் பிரசன்னத்துடன் அவரது ஆலோசனைகளை ஏற்று, ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

இந்த சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதில் சிக்கல்கள் காணப்படுமாயின் கோவிட் 19 பெருந்தொற்று அபாயம் இயல்பு நிலைக்கு வந்த பின்னர் புதிய நாள் ஒன்றுக்கு நிகழ்வைப் பிற்போடுவது உகந்ததாகுமென ஆலோசனை வழங்கப்படுகிறது என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பேரணியில்...

இந்நிலையில், இளைஞனின் உறவினர்கள் பருத்தித்துறை பொலிஸ் நிலையம் முன்பாகக் காத்திருந்தனர். இளைஞனின் தாய், மகனின் விடுதலையைக் கோரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கதறியழுதார்.

பருத்தித்துறையில் பேரணி இடம்பெற்ற வேளை இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிள் இலக்கத்தை வைத்து அவரை பொலிஸார் கைது செய்தனர். அவர் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்று ஆரம்பத்தில் குற்றம்சாட்டப்பட்டது.

இந்நிலையில் 6 மணிநேரம் அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டார். (அ-எ)

## யாழ். மாநகர...

யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள தூதுவர் பல தரப்பினரையும் தொடர்ச்சியாக சந்தித்து வரும் நிலையில் நேற்று நூலகத்திற்கு சென்று பார்வையிட்டதோடு மாநகர முதல்வரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் யாழ். மாநகர சபையின் ஆணையாளர் உள்ளிட்ட சில உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## இருவேறு...

யில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவரும், குமாரசாமிபுரம் பகுதியில் 06 போத்தல் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

அத்தோடு புளியம்பொக்கணை, கல்லாறு, பிரமந்தனாறு பகுதிகளில் அனுமதிப்பத்திரத்துக்கு முரணான வகையில் டிப்பரில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 6 சாரதிகளும் தருமபுர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (எ)

## குடியுரிமை...

இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் மூலம் எம்மை அரசியல் பழிவாங்கலுக்குட்படுத்தும் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் எமது குடியுரிமையைப் பறிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது. குடியுரிமை பறிக்கப்பட்ட அனுபவம் எங்களுக்கு உள்ளது. சிவில் உரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகளை இழக்க நாங்கள் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை. கடந்த காலங்களில் அதை எதிர்கொண்டோம். -என்றார். (அ-எ)

## என்னிடம்...

பது பற்றி பொலிஸ்மா அதிபரிடம் வினவி எங்களுக்கு அறிவியுங்கள் என நான் இன்று (நேற்று) இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், சபாநாயகர் மஹிந்த யாப்பாவிடம் கேள்வி எழுப்பினேன் என கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

எதிரணி எம்.பிக்களுக்கு எதிராக மாத்திரம் பொலிஸார் திட்டமிட்டு, நீதிமன்ற தடையுத்தரவுகளை பெறுகிறார்கள். எம்.பிக்களாக தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றம் வருவது, அங்கு சபையில் உரையாற்ற மட்டுமல்ல. உண்மையில் அது 25 விகிதம்தான். எமது 75 விகித பணி, என்னைப் பொறுத்தவரை, தெருவில், மக்கள் மத்தியில்தான் இருக்கிறது.

ஆகவே பாராளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் எம்.பிக்களின் கடமையை செய்யும் சுதந்திரத்தை, சபாநாயகர் என்ற முறையில் நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

இதுபற்றி நான் பாராளுமன்றத்திலும் கேள்வி எழுப்புவேன். இந்தக் கட்சித் தலைவர் குழுவில் அங்கம் வகிப்பதால், அதற்கு முன் இங்கும் அதுபற்றிக் கேட்கின்றேன், என சபாநாயகரிடம் நான் கூறினேன். இந்நிலையில், எனது செயலாளரை தொடர்பு கொண்ட சபாநாயகர் அலுவலகம், பொலிஸ்மா அதிபருக்கு இதுபற்றிய கடிதம் இன்று அனுப்பப்படும் எனத் தெரிவித்துள்ளது

எம்.பிக்களின் உரிமை தொடர்பில் நான் எழுப்பிய இந்தப் பிரச்னைக்கு, கட்சித் தலைவர் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைத்துக் கட்சி எம்.பிக்களும், ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்ற கட்சி பேதமின்றி ஆதரவு வழங்கினர். தடையுத்தரவு பெறுவது, நீதிமன்றத்துக்கு இழுப்பது, சிறைக்கு அனுப்புவது என்ற சலசலப்புக்களுக்கு அஞ்சி ஓடி ஒளியும் அரசியல்வாதி நானில்லை. இதுதொடர்பில் இவர்களுக்கு விளக்க வேண்டிய தேவை எனக்கு இருக்கின்றதால், இந்தப் பிரச்னையை கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நான் எழுப்பினேன்-என்றார். (அ-எ)

## மன்னாரில்...

எவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்படவில்லை.

இதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 426 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் ஒருவருக்கு மட்டும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இவர் மன்னார் நகரில் சிகையலங்கரிப்பு நிலையம் நடத்துபவர்.

இதனால் அந்த சிகையலங்கரிப்பு நிலையத்துக்கு கடந்த சில நாள்களாக சென்றோர் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் அடையாளப்படுத்தப்படுகின்றனர் என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (அ-எ)

## கோட்டாபய...

அரசியல் தலைவர்களின் குடியுரிமையை பறிக்கும் மிக மோசமான நடவடிக்கையில் இந்த அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது. அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை சம்பந்தப்படுத்தியே இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இதற்கு எதிராக நாம் சட்ட நடவடிக்கை எடுப்போம். நீதித்துறை கட்டமைப்பு சுயாதீனமாக செயற்படும் என நம்புகின்றோம். அத்துடன், நீதிக்கு புறம்பான வகையில் செயற்படும் இந்த அரசாங்கத்துக்கு எதிராக போராடுவோம்-என்றார்.

## இலங்கையில்....

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் காலத்திலேயே இலங்கை - சீன உறவு மிகச்சிறப்பான முறையில் பேணப்பட்டிருந்தது.

**பொருளாதார வல்லரசான சீனா**

சந்திரிகாவின் தந்தையார், தாயார் ஆகியோர் இலங்கையை ஆட்சிசெய்த காலத்தில் காணப்பட்ட சீனா வேறு. இன்றைய சீனா வேறாகவே இருக்கின்றது.

இன்றைய சீனா, உலகில் ஒரு பொருளாதார வல்லரசாகவும் வளர்ச்சி கண்டுள்ளது. கைத்தொழில் ரீதியாக முன்னணி வெளிநாட்டுத் தயாரிப்புகள் பலவும் சீனாவிலேயே உற்பத்தி செய்யப்படுவதுடன், திறந்த பொருளாதார கொள்கையை சீனா தனக்கேற்ற வகையில் வடிவமைத்து, சிறந்த முறையில் பேணிவருகின்றது.

இந்நிலையில், ஒரு முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் இலங்கையுடனான சீன உறவை சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விமர்சிப்பது ஒரு ஆரோக்கியமான இராஜதந்திர அணுகு முறையாக இருக்கமுடியாதென்றே கருதலாம்.

ஈழநாடு
Eelanadu
19.02.2021 வெள்ளிக்கிழமை
சார்வரி, மாசி 07

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# பிரதமர் மஹிந்தவின் வாக்குறுதி?

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கொரோனாவினால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாசாக்களை அடக்கம் செய்வதற்கு அனுமதிக்கப்படுமென்று பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தார். இது, முஸ்லிம் மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றிருந்தது. அதேவேளை, வெளிநாட்டு இராஜதந்திரிகளும் இதனை வரவேற்றிருந்தனர். அமெரிக்க தூதுவர் தனது ருவிட்டர் பக்கத்தில் பிரதமரின் அறிவிப்பை வரவேற்றிருந்தார். ஆனால், தற்போது பிரதமரின் அறிவிப்பு நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனை வரவேற்றிருந்த இராஜதந்திரிகள் ஏமாற்றமடைந்திருக்கின்றனர். அமெரிக்க தூதுவர் தனது ஏமாற்றத்தை வெளியிட்டிருக்கின்றார். முஸ்லிம் காங்கிரஸ், அரசாங்கத்தில் பிரதமருக்கு மரியாதை இல்லையா என்று கேள்வியெழுப்பியிருக்கின்றது.

உண்மையில், நாளுக்கு நாள் வெளியாகும் அறிக்கைகளை உற்றுநோக்கினால் அரசாங்கம் யாருடைய கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்றது என்பதை, விளங்கிக்கொள்வது கடினமான ஒன்றாகவே இருக்கின்றது. கிழக்கு கொள்கலன் முனைய விவகாரத்தில் ஜனாதிபதி கோட்டாபய அதனை இந்தியாவிற்கு வழங்கவேண்டியது அவசியமென்று தெரிவித்திருந்தார். ஆனால், தொழிற்சங்களின் எதிர்ப்பை தொடர்ந்து, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்கு அதனை வழங்கமுடியாதென்று அறிவித்திருந்தார். அது தொடர்பில் ஜனாதிபதி எவ்வித அபிப்பிராயங்களையும் தெரிவிக்கவில்லை. தற்போது முஸ்லிம்களின் ஜனாஸா விடயத்தில் மஹிந்த ராஜபக்ஷ ஒரு கருத்தை தெரிவித்திருந்தார். ஆனால், நடைமுறையில் எதுவும் நடைபெறவில்லை.

இந்த நிலையில், அரசாங்கத்திலிருக்கும் எவரது வாக்குறுதியை நம்புவது? எவ்வாறு நம்ப முடியும்? யாரிடம் அதிகாரமிருக்கின்றது? 20ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், மஹிந்த ராஜபக்ஷ ஒரு பெயரளவு பிரதமராகவே இருந்து வருகின்றார். ஆனால், கட்சியை பொறுத்தவரையில் அவரே செல்வாக்குமிக்கவராக இருக்கின்றார். ஆனால், அதுவும் தொடருமா என்பதிலும் தற்போது சந்தேகங்கள் எழுந்திருக்கின்றன. விமல் வீரவன்சவின் கருத்துக்கள் உள்ளுக்குள் சில சிக்கல்கள் இருக்கின்றன என்பதையே காண்பிக்கின்றது.

ஒரு பிரதமர் ஓர் அறிவிப்பை செய்தபின்னர், அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கின்றதென்றால், அரசாங்கத்திலிருப்பவர்களின் வாக்குறுதிகளை எவ்வாறு சர்வதேச சமூகம் கருத்தில்கொள்ள முடியும்? எவ்வாறு இந்த அரசாங்கத்தை நம்பி ஒப்பந்தங்களை மேற்கொள்ள முடியும்? குறிப்பாக, தமிழ் மக்களின் பிரச்னை தொடர்பில் இந்த அரசாங்கத்தை எந்த நம்பிக்கையின் அடிப்படையில் அணுக முடியும்?

முஸ்லிம்களின் விவகாரத்தில் பிரதமரினால்கூட ஒரு முடிவை மேற்கொள்ள முடியாமல் இருக்கிறதென்றால், அந்தளவிற்கு அரசாங்கத்திற்குள் முஸ்லிம்களுக்கு எதிரான கொள்கை நிலைப்பாடுள்ளவர்கள் மிகவும் பலமாக இருக்கின்றனர் என்பதுதானே பொருள். அவ்வாறாயின், அவர்கள் நிச்சயம் எந்தவொரு முன்னேற்றகரமான விடயங்களையும் அனுமதிக்கமாட்டார்கள். இதுதான் இந்த நாட்டின் நிலைமையென்றால், ஜனாதிபதி, பிரமருடன் பேச்சுக்களை முன்னெடுப்பதில் எவ்வித பயனும் இருக்கப்போவதில்லை. இது மிகவும் ஆபத்தான நிலைமையாகும். இந்த இடத்தில் எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்கள் சமூகங்கள் அனைத்தும் ஓரணியில் நிற்பதன் மூலம்தான் இந்த ஜனநாயக நெருக்கடியை எதிர்கொள்ள முடியும். உண்மையில், இந்த நாடு ஒரு ஜனநாயக நெருக்கடிக்குள் இருக்கின்றது என்பதையே, நடக்கும் ஒவ்வொரு விடயங்களும் வெளிப்படுத்துகின்றன.

# இலங்கையில் சீன ஆதிக்கம்: சந்திரிகாவின் ‘நீலிக்கண்ணீர்’!

- அலசுவது இராஜதந்திரி -

*இலங்கையில் சீன ஆதிக்கம் அதிகரித்து வருவதாகவும், சீனாவிடம் இலங்கையை அடகு வைக்க ராஜபக்ஷ அரசு முயன்று வருவதாகவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தமது கணவரின் 33ஆவது நினைவுதின வைபவத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை உரையாற்றியபோது தெரிவித்திருந்தார்.*

*முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் குறித்த கருத்தை நோக்கும்போது அழுவதா அல்லது சிரிப்பதா ? என்றே புரியவில்லை.*

*ஆங்கிலேயரது ஆட்சியிலிருந்து இலங்கை விடுபட்டபோது இலங்கை பெரிதும் ஆங்கிலேய, மேற்கத்தைய மோகம்கொண்ட நாடாகவே விளங்கியிருந்தது.*

**ஆங்கிலேய மோகம்**

*இதற்கு அன்று இலங்கையின் அரசியல்வாதிகளாக இருந்த பலரும் இங்கிலாந்தில் கல்வி பயின்றோராக இருந்தனர். ஆங்கிலேய பிரபுத்துவ குடும்பங்களின் நடை, உடை பாவனையைத் தழுவியதாகவே பிரபலமான தென்னிலங்கைக் குடும்பங்கள் விளங்கியிருந்தன.*

*இலங்கையின் முதலாவது ஆளுங்கட்சியாக இருந்த ஐக்கிய தேசிய கட்சி பெரிதும் வலதுசாரிப் போக்குடைய கட்சியாகவே இயிருந்தது.*

*இத்தருணத்திலேயே ஆங்கில மோகத்தின் பின்னணியில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றாலும், இடதுசாரிப் போக்குடைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்து, தாம் பிரதம மந்திரியாக இருந்த காலத்தில் 1957ஆம் ஆண்டு சீனாவுடன் இலங்கையின் இராஜதந்திர ரீதியிலான தொடர்பை முதலில் ஏற்படுத்தியவர் சந்திரிகாவின் தந்தையாரான காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா என்பது குறிப்பிடத்தக்கது.*

*இதன்பின்னர், இலங்கைக்கும் சீனாவுக்குமிடையிலான இராஜதந்திர நட்புறவு படிப்படியாக பலமடைய ஆரம்பித்து, தற்போது இலங்கையின் புவியியல் அமைப்பையே மாற்றியமைக்கும் வகையில் கொழும்பு துறைமுக நகர நிர்மாணத்துடன் சீனாவின் இராஜதந்திர நட்புறவு பலமடைந்துள்ளது.*

**பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம்**

*முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்க, சீனாவுடனான உறவைப் பேணுவதில் முன்னின்றார் . அவரது அமைச்சர்களாக இருந்த பலரும் இடது சாரிப் போக்குடையோராகவே இருந்தனர்.*

*சிறிமாவோ பண்டாரநாயக்க சீனாவுடன் கொண்டிருந்த நல்லுறவின் அடையாளமாக இலங்கையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் சீனாவினால் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தது. இம்மண்டபத்தில் நடத்தப்பட்ட முதலாவது மாநாடாகவே 1976ஆம் ஆண்டு அணிசேரா அமைப் பின் ஐந்தாவது உச்சி மாநாடு இடம்பெற்றிருந்தது.*

*இலங்கை சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சியில் சீனாவுடன் நெருங்கிய நட்பு பாராட்டியவேளை, இந்தியாவில் பிரதம மந்திரி இந்திரா காந்தியின் ஆட்சி நிலவியிருந்தது. இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி , இலங்கைப் பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்காவின் மிக நெருங்திய தோழியாகவும் இருந்தார்.*

*எனவே, அயல் நாடான இந்தியாவுடன் நெருங்கிய நட்புப்பாராட்டிய அதேசமயம், இந்தியாவின் பகை நாடான சீனாவுடனும் இலங்கை நட்புறவை நல்ல முறையில் பேணியிருந்தது.*

**உயர்ந்த தரத்திலான இராஜதந்திர சேவை**

*இத்தகைய போக்கிற்கு அன்று காணப்பட்ட இலங்கை வெளிநாட்டு சேவை உயர்ந்த தரத்திலானதாக காணப்பட்டிருந்தது.*

*அமெரிக்காவுக்கும் அன்றைய சோவியத் யூனியனுக்குமிடையே பனிப்போர் நிலவியிருந்த காலத்தில், இலங்கை அணிசேராக் கொள்கையை பின்பற்றியதோடு, வல்லரசுக் கெடுபிடிகளுக்குள்ளாகாத விதத்தில் மிக நல்ல முறையில் தனது வெளிநாட்டுக் கொள்கையை பேணியிருந்தது.*

*இலங்கையின் வெளிநாட்டு சேவையில் பணியாற்றிய இராஜதந்திரிகள் சிறந்த தொழில்சார் தகைமைகளை கொண்டோராக விளங்கியிருந்தனர்.*

*ஆனால், இன்று அயல் நாடான இந்தியாவுடன் நேர்த்தியான உறவைப்பேணி, சீனாவுடனான உறவைக்கொண்டிருக்கும் விதத்தில் இலங்கையின் இராஜதந்திர சேவை காத்திரமானதாகக் காணப்படவில்லை.*

*இலங்கையின் இராஜதந்திர சேவையில் ஆயுதப்படைகளில் பணியாற்றி இளைப்பாறிய உயர் அதிகாரிகளே நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், இலங்கையின் வெளிநாட்டுச் சேவை என்பது கேலிக்குரியதாகவே மாற்றங்கண்டுள்ளது.*

*இந்நிலையில், தற்போது சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் விரிவடைவது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்துள்ள கருத்து வேடிக்கையானதாகவே இருக்கின்றது.*

*ஏனெனில், இலங்கையில் சீனாவுடனான இராஜதந்திர உறவுக்கு முதலில் வித்திட்டது சந்திரிகாவின் தந்தையார் காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா என்பது குறிப்பிடத்தக்கது. அதே சமயம், சந்திரகாவின் தாயார் காலஞ்சென்ற*

*(02ஆம் பக்கம் பார்க்க)*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பிப்ரவரி 19 வெள்ளிக்கிழமை
சார்வரி வருடம் - மாசி 7
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகுகாலம் : 3.00 - 4.30
திதி : அஷ்டமி



## இன்றைய ராசிபலன்

19.02.2021

**மேடம்**
தொழில் நிதானமாக நடக்கும். கடன் கட்டுக்குள் இருக்கும்.உங்களின் புதிய முயற்சிகள் சாதகமான பலன் தரும். மனதுக்கு உகந்த விஷயங்கள் செய்யும் வாய்ப்பு வரும்.

**இடபம்**
பொழுது போக்கான நிகழ்ச்சிகளில் கவனம் திரும்பும். பொறுப்பான விஷயத்தில் ஈடுபடுவீர்கள். பொறுமை காப்பீர்கள். குடும்பத்தினருடன் கோபமாக பேசுவதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்**
எல்லாவற்றிற்கும் பாராட்டை எதிர்பார்க்க வேண்டாம். பழைய சோகங்களைக் கிளறுபவர்களைத் தவிர்க்க வேண்டும். சண்டை ஏற்படக்கூடிய சூழலை மாற்றி நிம்மதி அடைவீர்கள்.

**கடகம்**
அலைச்சலை சந்திக்க வேண்டிய நிலையை மாற்றுவீர்கள்.நீங்கள் பயந்த விஷயங்களில் அந்த அளவு பாதிப்புகள் இருக்காது. வெளிநாட்டில் உள்ள பிள்ளைகள் பற்றிய கவலை தீரும்.

**சிம்மம்**
மனதில் உறுதியும், தைரியமும் அதிகரிக்கும். மன நிறைவு வரும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். அதிர்ஷ்டத்தை மறுக்க வேண்டாம். பணிகள் மூலம் ஏற்பட்ட மனஅழுத்தம் குறையும்.

**கன்னி**
நேற்றிருந்த நிலைமை மாறி, மனதில் நிம்மதி மீளும். கருத்து வேறுபாடு ஏற்படாமல் கவனமாக இருப்பது நல்லது. மற்றவர் தூற்றும் படியான செயல்களைச் செய்ய வேண்டாம்.

**துலாம்**
கோபத்தில் மனம்போனபடி பேசிவிட்டு வருந்த வேண்டாம். நியாயமான வழியில் வருமானம் ஈட்டும் வழியை கண்டறிவீர்கள். வேலை மாறுவது பற்றி யோசனை வெற்றி பெறும்.

**விருட்சிகம்**
பெரியோருக்கு நன்மை செய்து அவர்களின் ஆசியை பெறுவீர்கள்.மற்றவர்களின் குற்றத்தைக் குத்திக்காட்டுவதில் பலன் இல்லை. பெரிய குறிக்கோள்களை அடைய நிறைய முயற்சி செய்வீர்கள்.

**தனுசு**
உறவினர் பலரை ஒரே நேரத்தில் சந்திக்க வாய்ப்பு வரும். உடற்பயிற்சியால் உடல் நலம் பேணும் ஆர்வம் அதிகரிக்கும். உங்களை நம்பிச் சொன்ன விஷயங்களை வெளியிட வேண்டாம்.

**மகரம்**
சகோதரர்களால் பணம் பற்றி சில சங்கடங்கள் ஏற்படும். வாழ்வில் உயர திடீர் வாய்ப்புகள் வந்து மகிழ்ச்சி தரும். உடல்நலனில் கவனமாக இருப்பதால் சிரமம் இருக்காது.

**கும்பம்**
ஆக்கப்பூர்வமான யோசனைகள் தோன்றி வெற்றி தரும். பிள்ளைகளின் வாழ்வை நினைத்து மன அழுத்தம் ஏற்பட்டு நீங்கும். நல்ல மாற்றம் ஒன்று நிகழ்ந்து சந்தோஷத்தை தரும்.

**மீனம்**
போதுமான பணம் இருப்பதால் செலவைச் சமாளிப்பீர்கள். மனஉறுதி காரணமாக சிரமம் வராதபடி காத்துக் கொள்வீர்கள். சிலரால் ஏற்படும் பிரச்னைகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

# தடுப்பூசியின் 2ஆவது டோஸ் புது வருடத்துக்குப் பின்னரே!

கொழும்பு,பெப்.19

**இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா செனேகா கொரோனா தடுப்பூசியின் முதல் டோஸ் வழங்கப்பட்ட இலங்கையர்களுக்கு அதன் இரண்டாவது டோஸ், தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்குப் பின்னர் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

அதற்கு தேவையான தடுப்பூசிகள் இலங்கைக்கு விரைவாக கிடைக்கும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த மாத இறுதிக்குள் கொவெக்ஸ் வசதியின் கீழ் உலக சுகாதார அமைப்பினால் 2 இலட்சத்து 64 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கவுள்ளதாக பதில் சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

(அ)

# மேலதிகமாக 10,500 மாணவர் இம்முறை பல்கலைகளுக்கு

கொழும்பு, பெப். 19

பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்து 500 இனால் அதிகரிக்கப்படவுள்ளது.

இதற்காக பல்கலைக்கழக கட்டமைப்பில் புதிதாக 500 விரிவுரையாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், “பல்கலைக்கழகங்களுக்கு இந்த வருடம் இணைத்துக்கொள்ளப்படவுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்து 579 ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக 40 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படவுள்ளார்கள்.

இதற்காக துணைவேந்தர்கள் மற்றும் திறைசேரியின் பங்களிப்பு கிடைத்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு அடுத்த மாதத்துக்கு முன்னதாக கொரோனா தடுப்பூசியை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக முதற்கட்டத்தின் கீழ் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ள மருத்துவபீட மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கப்படவுள்ளது-என்றார்.

# புதன் நடந்த 13 மரணங்களும் கொழும்புக்கு வெளியே பதிவு

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு*

கொழும்பு, பெப். 19

கொரோனா தொற்றினால் நேற்று முன்தினம் பதிவாகிய அதிக எண்ணிக்கையிலான இறப்புக்கள், குறிப்பாக வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவை என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.



நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அந்தச் சங்கத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஹரித அளுத்கே, நாட்டின் மொத்த கொரோனா மரணங்களில் 60-65 வீதம் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் பதிவாகியதாக குறிப்பிட்டார்.

இருப்பினும் நேற்று முன் தினம் பதிவாகிய 13 இறப்புகளும் வெளி பகுதிகளில் பதிவாகியதாகவும் வைத்தியர் ஹரித அளுத்கே கூறினார்.

ஆகவே, வைரஸ் தொடர்பான அதிக இறப்புகளைத் தவிர்ப்பதற்காக, கடுமையான திட்டத்தை சுகாதார அமைச்சு செயற்படுத்தவேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஹரித அளுத்கே குறிப்பிட்டார்.

# பேராயரின் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்குத் தீர்மானம்

கொழும்பு, பெப். 19

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற காலப்பகுதியில் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டதாகக் கூறப்படும், 6,000 வாள்கள் தொடர்பில் முறையாக விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக் கோரி, பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தாக்கல் செய்துள்ள ரிட் மனுவை, மார்ச் மாதம் 05 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இதன்போது, இந்த விடயம் தொடர்பாக இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகள் தொடர்பில் தெளிவுப்படுத்தவேண்டும் என பொலிஸ்மா அதிபர் சி.டி விக்கிரமரத்ன உள்ளிட்ட குறித்த மனுவின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ள பாதுகாப்புப் பிரிவின் பிரதானிகளுக்கு நீதிமன்றம் அறிவித்தல் விடுத்துள்ளது.

# டுபாய் விமான சேவை மீண்டும் ஆரம்பம்!

கொழும்பு, பெப். 19

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இலங்கையுடன் விமானப் பயணங்களை தற்காலிகமாக இடை நிறுத்தியிருந்த டுபாய் விமான சேவை நேற்று வியாழக்கிழமை முதல் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய ‘பிளை டுபாய்’ விமான சேவையின் முதலாவது விமானம் 58 பயணிகளுடன் டுபாயிலிருந்து நேற்று அதிகாலை 12.50 மணிக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்த விமானம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து 166 பயணிகளுடன் நேற்று அதிகாலை 1.50 மணிக்கு மீண்டும் டுபாய் நோக்கி புறப்பட்டது.

‘பிளை டுபாய்’ விமான சேவை வாரத்துக்கு இரண்டு தடவை (செவ்வாய் மற்றும் வியாழன்) அதிகாலை டுபாயிலிருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு நேரடி விமான சேவையை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் விமான நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# பளையில் நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகள் சீனாவுக்கு!

## பரபரப்புத் தகவல் வெளியிட்டார் சுரேஷ்

யாழ்ப்பாணம், பெப். 19

பளை பகுதியில் நூற்றுக் கணக்கான ஏக்கர் காணிகளைச் சீன நிறுவனம் ஒன்றுக்கும், சிங்கள வர்த்தகர்களுக்கும் வழங்கும் நடவடிக்கையை கோட்டாபய அரசு மேற்கொள்கிறது. இதற்காகவே, காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகம் யாழ்ப்பாணத்திலிருந்து அநுராதபுரத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பளைப் பகுதியில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமாக 3,000 ஏக்கர் காணியுள்ளது. அந்தப் பகுதியில் சீன நிறுவனத்துக்கும், சிங்கள முதலாளிகளுக்கும் அரசு காணி வழங்கவுள்ளதாக நம்பத்தகுந்த செய்தி எமக்கு கிடைத்துள்ளது.

தமிழ் மக்களின் காணிகளைப் பறிமுதல் செய்து சீனக் காரருக்கு கொடுக்க, சிங்களவர்



களுக்கு கொடுக்க முன்னாயத்த நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது.

பளையில், புதுக்காட்டுச் சந்திக்கு அண்மையில் தேசிய காணி அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான 287 ஏக்கர் தென்னந்தோட்டங்கள் உள்ளன. அதை சிங்கள முதலாளிகளுக்கு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த காணிகளை யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தகர்கள் கேட்டும், அவர்களுக்கு வழங்காமல் சிங்கள முதலாளிகளுக்கு வழங்கப்படுகிறது.

அரசியல் பிரச்னையில்லை, அபிவிருத்தி நடந்தால் போதும் என அரசாங்கம் கூறிக்கொண்டிருக்கிறது. அபிவிருத்தியென்ற பெயரில் தமிழர்களின் காணிகளைப் பிடுங்கி சிங்களவர்களுக்கு கொடுக்கும் நடவடிக்கையைத்தான் இந்த அரசாங்கம் மேற்கொள்கின்றது.

அரசாங்கம், இராணுவம் அனைவரும் கூட்டாக இதனை செய்கிறார்கள்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதை கண்டுகொள்ளாமலிருப்பது வருத்தமானது.

காணி சீர்திருத்த ஆணைக் குழுவின் பிராந்திய அலுவலகத்தை யாழ்ப்பாணத்திலிருந்து அனுராதபுரத்திற்கு மாற்ற முயல்வதும் இதற்குத்தான். இந்த மாற்றத்தை தடுத்து நிறுத்தவேண்டும். வடக்குக் கான பிராந்திய அலுவலகம் வடமத்திய மாகாணத்துக்கு மாற்றுவதை ஏற்க முடியாது.

பளையில் சீனா அல்லது வேறு நிறுவனங்களுக்கு காணி கொடுப்பதை நிறுத்தவேண்டும். இந்தப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான இளைஞர்கள் காணி கேட்டு விண்ணப்பித்துள்ளனர். அவர்களுக்கு காணி வழங்காமல் சீனா, சிங்களவர்களுக்கு வழங்குவதை தடுத்து நிறுத்தவேண்டும். இனிவரும் நாட்களில் பெரும் போராட்டங்களுக்கு தமிழ்மக்கள் தங்களை தயார்படுத்திக் கொள்ளவேண்டிய சூழலுக்கு அரசு தள்ளுகிறது - என்றார்.

# முக்கியமான கட்டத்தில் பொருளாதார பிரச்னை

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 19

அரசாங்கத்தின் பொருளாதார பிரச்னைகள் ஒரு முக்கிய கட்டத்தை எட்டியுள்ளன ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், கடந்த சில வாரங்களாக நாட்டில் அமெரிக்க டொலர் இருப்பு படிப்படியாக குறைந்து வருவதாகவும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை கடந்த சில நாட்களில் கடுமையாக அதிகரித்துள்ளது.

ஆகவே மாத இறுதிக்குள், அரசாங்கம் உள்நாட்டு எரி



பொருள் விலையை அதிகரிக்க வேண்டும் அல்லது எரி பொருளுக்கு விதிக்கப்படும் வரியைக் குறைக்க வேண்டும்-என்றார்.

2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் நிறைவில் 4.8 பில்லியன் டொலர் வெளிநாட்டு இருப்பு இருந்தது என்றும் தற்போது அது குறைவடைந்திருப்பதாகவும் மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ. டி.லக்ஷ்மன் கடந்த வாரம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மேலும் 762 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, பெப். 19

வெளிநாடுகளில் இருந்து மேலும் 762 பயணிகள் நாட்டை வந்தடைந்தனர்.

நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கிய 18 விமானங்களின் மூலமாக அவர்கள் நாட்டை வந்தடைந்தனர்.

நாட்டை வந்தடைந்த அவர்கள் அனைவரும் இலங்கை இராணுவத்தினரால் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

## கொரோனாவால் உயிரிழந்த இளைஞருக்கு

# 2ஆவது பி.சி.ஆர். கோரிய மனு தள்ளுபடி

கொழும்பு, பெப். 19

கொரோனா தொற்று காரணமாகவே உயிரிழந்த இளைஞருக்கு இரண்டாவது முறையாக பரிசோதனை செய்ய வேண்டும் எனக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்துள்ளது.

மனுதாரர் மற்றும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அளித்த சமர்ப்பிப்புகளை கருத்தில்கொண்டு நீதியரசர்கள் அர்ஜுன ஒபேசேகர மற்றும் மாயதுன்னே கொரயா ஆகியோர் அடங்கிய அமர்வு மனுவை நிராகரித்தது.

சட்டமா அதிபரை பிரதிநிதித்துவப்படுத்தி முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல், இந்த மனுவை விசாரணைக்கு உட்படுத்தாமல் தள்ளுபடி செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வைக் கேட்டுக்கொண்டார்.

இருப்பினும் பி.சி.ஆர். சோதனைகள் தவறான முடிவைத் தரக்கூடும் என உலக சுகாதார நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளதாகவும், எனவே ஆரம்ப பரிசோதனை செல்லுபடியானது என உறுதிப்படுத்த இரண்டாவது பரிசோதனையை நடத்த கோருவதாக மனுதாரரை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி மன்றில் கூறினார்.

திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவர், களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 31ஆம் திகதி உயிரிழந்தார்.

இதனையடுத்து, குறித்த இளைஞர் கொரோனா தொற்று காரணமாகவே உயிரிழந்தார் என வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இரண்டாவது பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படும் வரை, சடலத்தை தகனம் செய்வதை தவிர்க்கும் வகையில் உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி, உயிரிழந்த நபரின் தந்தையால் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

# இந்த நாட்டை பாதுகாக்குமாறு நாம் சகலரும் கடவுளிடம் மன்றாடுவோம்

## மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவிப்பு

கொழும்பு, பெப். 19

இந்த நாட்டை பாதுகாக்குமாறு நாம் அனைவரும் கடவுளிடம் மன்றாடுவோம் எனப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

திருநீற்றுப் புதன் சிறப்பு வழிபாடு நேற்று முன்தினம் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியில் மறையுரையாற்றும்போதே பேராயர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் மறையுரையாற்றிய அவர், "இன, மத ரீதியில் மக்களை பிளவுபடுத்துவதற்கு வெளிநாட்டு சக்திகள் முயற்சிக்கின்றன. அதற்கு நாம் இடமளிக்கக் கூடாது.

பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், முஸ்லிம் என்றில்லாமல் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவது முக்கியம். இந்த நாட்டை பாதுகாக்குமாறு நாம் அனைவரும் கடவுளிடம் மன்றாடுவோம்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு இதே தவக்



காலத்தை நாம் நிறைவுசெய்து ஈஸ்டர் பண்டிகையை கொண்டாட ஆயத்தமாகும் போதே கொடூரமான குண்டுத் தாக்குதல் மூலம் மக்கள் இதே ஆலயத்தில் திருப்பலியின்போது பலர் கொல்லப்பட்டனர்.

அது ஒரு திட்டமிடப்பட்ட சம்பவம். அந்த திட்டமிடப்பட்ட சம்பவம் தொடர்பில் நாம் நீதியை கோருகின்றோம். குற்றங்கள் மன்னிக்கப்படலாம் எனினும் குற்றங்கள் மறைக்கப்பட்டு விடக்கூடாது.

ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் நாம் திருப்திபடும் வகையில் இல்லை. அது தொடர்பில் நாம் இறைவனிடம் முறையிடுவோம். அவரது நீதிமன்றத்திற்கு செல்வோம். சுயநல செயற்பாடுகளால் இந்த நாடு பின்னோக்கி செல்லவிடக் கூடாது.

நூற்றுக்கணக்கான பேரை பலி கொண்ட ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் நீதி பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அது ஒரு தேசிய பொறுப்பாகும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணரவேண்டும்.

குற்றங்களை மன்னிக்கலாம் எனினும் இனியும் இவ்வாறான கொடூர சம்பவங்கள் நடக்காமல் பாதுகாப்பது அவசியம். ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவம் திட்டமிடப்பட்ட ஒன்று. சில குழுக்களால் அல்லது வெளிநாட்டு சக்திகளினால் அது திட்டமிடப்பட்டிருக்கலாம்.

எமது தாய் நாட்டில் இன, மதங்களுக்கிடையில் பேதங்களை ஏற்படுத்துவதற்காக வெளிநாட்டு சக்திகள் மேற்கொண்ட முயற்சியாகவும் இருக்கலாம். அனைத்து மக்களும் ஒன்றிணைந்து செயற்பட்டு எமது நாட்டைப் பாதுகாப்பதற்காக கடவுளிடம் மன்றாடுவோம்-என்றார். (அ)

# சுகாதார விதிகளை மீறிய 8 பேர் கைது

கொழும்பு, பெப். 19

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டிலேயே கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 08 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதன்படி, கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதியிலிருந்து இதுவரை முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் இது வரை 3,164 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

# 1,012 கிலோ மஞ்சள் புத்தளத்தில் பறிமுதல்

கொழும்பு, பெப். 19

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட சுமார் 1,012 கிலோகிராம் மஞ்சள் புத்தளத்தில் கைப்பற்றப்பட்டுள்ளது.

புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, புத்தளம் - மன்னார் வீதியின் இரண்டாம் கட்டைப் பகுதியில் அமைந்துள்ள உப்பளமொன்றில் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது. இதன்போது 11 மூடைகளில் பொதியிடப்பட்டிருந்த நிலையில் இந்த மஞ்சள் தொகை கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் புத்தளம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட மஞ்சள் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# இம்ரான்கானின் உரை இரத்து; முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தி!



கொழும்பு, பெப். 19

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் பாராளுமன்ற உரை இரத்து செய்யப்பட்டது ஏமாற்றமளிக்கின்றது பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

எதிர்வரும் திங்கட்கிழமை இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ள எண்ணியுள்ள பாகிஸ்தானிய பிரதமர் இம்ரான்கானின் விஜயத்தின் போது இலங்கை பாராளுமன்றத்தில் உரையாற்றவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் திடீரென அவரது பாராளுமன்ற உரை இரத்து செய்யப்பட்டது ஜனநாயகத்தின் மீது கொண்ட நம்பிக்கைக்கு எதிரான செயலாகவே பார்க்கமுடிகிறது.

இம்ரான்கானின் இலங்கை பாராளுமன்ற விசேட உரையில் அவர் எந்த விடயங்களைப் பேசப்போகிறார் என இலங்கை மக்கள் மட்டுமில்லாது சர்வதேசமே உன்னிப்பாக நோக்கிக் கொண்டிருந்த இந்த சூழ்நிலையில் அவரின் உரை ரத்து செய்யப்பட்ட செய்தி வெளியாகியுள்ளமை பலத்த ஏமாற்றத்தையும் கவலையையும் தோற்றுவித்துள்ளது.

இலங்கையின் நட்பு நாடுகளில் முதன்மையான சர்வதேச ஒற்றுமையை வலியுறுத்தி தனது அரசியலை முன்னெடுக்கும் பாகிஸ்தான் பிரதமருக்கு இவ்வாறான தர்மசங்கட நிலையை உருவாக்கி அவமானத்தை உண்டாக்கியுள்ள இந்த செயற்பாடானது இலங்கை அரசாங்க ராஜதந்திரப் போக்கின் தொய்வு நிலையை காட்டுகிறது.

ஜனநாயக வலிமை, நீதி, நியாயத்தை வலியுறுத்தல் உட்பட இலங்கையின் பல்லின மக்களின் பிரச்னைகளை இலங்கை பாராளுமன்றத்தில் பேசி இலங்கை அரசாங்கத்துக்கு வேண்டுகோளை முன்வைப்பார் என இலங்கை சிறுபான்மை மக்கள் மத்தியில் நம்பிக்கை பரவியிருந்த நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் இலங்கை அரசாங்கமும், சபாநாயகரும் மீள் ஆலோசனை செய்து பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் இலங்கை பாராளுமன்ற விசேட உரையை உறுதிப் படுத்த முன்வரவேண்டும்" என்று கேட்டுள்ளார்.

(அ)

# இலங்கையில் பா.ஜ.க உதயம் உறுதி யாருமே குழப்பமடைய வேண்டாம்!

## இந்து சமயப் பேரவை விளக்கம்

யாழ்ப்பாணம், பெப். 19

**பாரதிய ஜனதா கட்சி இலங்கையில் அமைவது தொடர்பில் மக்கள் குழப்பமடையத் தேவையில்லை என இந்து சமயப் பேரவையின் தலைவர் சக்திகிரீவன் தெரிவித்துள்ளார்.**



இலங்கையிலும் பாரதிய ஜனதா கட்சி ஆரம்பிக்கப்படும் என்ற கருத்து நிலவி வருவது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்றைய நாட்களில் பத்திரிகை ஊடகங்களில் பாரதிய ஜனதா கட்சி இலங்கையில் அமைப்பது தொடர்பில் பல வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்த விடயம் தொடர்பில் ஒரு விடயத்தை கூற விரும்புகின்றேன். இந்த கட்சியானது இந்து சமயத்துடன் நேரடியாக தொடர்புபடுவதன் காரணமாகவும் நானும் ஒரு இந்து மதத்தின் முக்கிய பதவியில் இருப்பதன் காரணமாக சில விடயங்களை நான் பதிவிடவேண்டி உள்ளது.

அதிகாரிகளும் அரசியல் தலைமைகளும் இலங்கையில் பாரதிய ஜனதா கட்சி அமைக்க முடியாது என கூறுகிறார்கள். அவர்கள் சொல்வதிலும் நியாயம் இருக்கிறது. இந்தியாவில் இருக்கும் பாரதிய ஜனதா கட்சியை இங்கே அமைக்க முடியாது. அது இந்திய திருநாட்டுக்குரிய கட்சி. ஆனால் இங்கே அமையப்போகின்ற கட்சி இலங்கையின் அரசமைப்புக்கு ஏற்புடையதான ஒரு கட்சி தான் என்பதை தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

எப்படி அமெரிக்க காங்கிரஸ் இங்கே இலங்கை காங்கிரஸ் என்று பதிவு செய்கிறார்களோ அதேபோல் சீன கம்யூனிஸ்ட் இங்கே பதிவு செய்கிறார்களோ அதேபோலத்தான் இலங்கை அரசமைப்புச் சட்டத்தில் என்ன சொல்லப்படுகிறதோ அந்த சட்ட அனைத்து ஏற்பாடுகளுக்கும் உட்பட்டுத்தான் இந்த கட்சி பதிவு செய்யப்படும் என்பதை இங்கு சொல்லி வைக்க விரும்புகின்றேன்.

இந்த விடயம் சம்பந்தமாக அரசியல் தலைவர்களோ அல்லது சமயத் தலைவர்கள் குழப்பமடைய தேவையில்லை.

இலங்கையிலேயே பாரதிய ஜனதா கட்சியை ஆரம்பிக்க உள்ளவர் என்னைச் சந்தித்து ஆசி பெற்று சென்றார். அவரிடம், நீங்கள் இலங்கை அரசியல் யாப்புக்கேற்றவாறா இந்த கட்சியை ஆரம்பிக்கவுள்ளீர்கள் எனக் கேட்டேன். அதற்கு அவர் தெளிவாக கூறினார், எந்தவித மாறுபாடும் இன்றி இந்திய திருநாடு தர்ம ரீதியில் ஒத்துப்போகுமே தவிர எந்த விடயங்களிலும் அது தலையிட முடியாது - என்று கூறினார்.

இந்த கட்சி இந்து மக்களுக்கு மட்டுமே ஆரம்பிக்கப்படும் எனவும் கூறுகிறார்கள். அது பொய்யான விடயம். இது அனைத்து மதத்தவர்களும் இந்த கட்சியில் இணைந்து கொள்ள முடியும். எனவே குறித்த கட்சியை இங்கே ஆரம்பிப்பது தொடர்பில் யாரும் குழப்பமடைய தேவையில்லை- என்றார்.

(அ)

# திருகோணமலை எண்ணெய்த் தாங்கி விடயம் இரு தரப்பும் நன்மையடையும் வகையில் தீர்வு!

## இலங்கைக்கு இந்தியத் தூதரகம் பதிலடி

கொழும்பு, பெப். 19

இந்தியாவும் இலங்கையும் இணைந்து இரு தரப்பும் நன்மையடையும் வகையில், திருகோணமலை எரிபொருள் தாங்கிகளை அபிவிருத்தி செய்ய இந்தியா தயாராகவுள்ளது என இலங்கைக்கான இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

திருகோணமலை எரிபொருள் தாங்கிகளை மீண்டும் இலங்கை வசமாக்குவது குறித்து கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே மற்றும் இலங்கை தரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடல் வெற்றியளித்துள்ளது எனவும், அதனடிப்படையில் 2017ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட கூட்டு முயற்சிக்கான இரு தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது எனவும், திருகோணமலை எரிபொருள் தாங்கிகள் அனைத்தும் வெகு விரைவில் இலங்கை வசமாகும் எனவும் சக்தி வலு அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்திருந்தார்.

அமைச்சரின் கருத்துக்குப் பதிலளித்துள்ள, இந்தியத் தூதரகம் மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கை மற்றும் இந்தியா, எரிபொருள் தொடர்பான கூட்டாண்மையை தங்களது ஒத்துழைப்பின் முன்னுரிமை பரிமாணங்களில் ஒன்றாக அடையாளம் கண்டுள்ளது. இலங்கையின் எரிபொருள் பாதுகாப்புக்காக இலங்கையுடன் இணைந்து பணியாற்ற இந்தியா உறுதி பூண்டுள்ளது.

அதற்கமைய, திருகோணமலையில் உள்ள எரிபொருள் தாங்கிகளின் அபிவிருத்தி மற்றும் செயற்பாட்டில், இரு தரப்பும் பரஸ்பர நன்மை பயக்கும் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கான ஆலோசனை மற்றும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பாக இலங்கையுடனான ஆக்கபூர்வமான தொடர்பைத் தொடர்ந்தும் முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம் என்றுள்ளது.

# இம்ரான்கானை சபைக்கு அழைத்து வரவேண்டாம்

## வெளிவிவகார அமைச்சிடம் சபாநாயகர் கோரிக்கை

கொழும்பு, பெப். 19

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானை பாராளுமன்றத்துக்கு அழைத்து வரவேண்டாம் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன வெளிவிவகார அமைச்சிடம் எழுத்து மூலம் கோரியுள்ளார்.



பாகிஸ்தான் பிரதமரை பாராளுமன்றத்துக்கு அழைப்பதாக இருந்தால், பாராளுமன்ற ஊழியர்கள் அனைவரையும் அழைக்க வேண்டி ஏற்படுவதாகவும், தற்போதைய சூழ்நிலையில் அது பொருத்தம் இல்லையெனவும் சபாநாயகர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் எதிர்வரும் 22 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதுடன், அவர் 24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

# அமைச்சர்களின் குடும்பங்களுக்கு திருட்டுத்தனமாக தடுப்பூசி ஏற்றல்

## ஹேஷ விதானகே குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 19

அமைச்சர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு திருட்டுத்தனமாக கொரோனா தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷ விதானகே இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படுவதாக காட்டிக்கொண்டு, இவ்வாறு குடும்ப உறுப்பினர்களுக்கு தடுப்புசி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் கடைசிக் குடிமகனுக்கு தடுப்பூசி செலுத்தப்படும் வரை தான் தடுப்பூசி செலுத்திக் கொள்ளப்போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

# அரசின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, பெப். 19

அரசை பிரதிநிதித்துவப் படுத்தும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் நேற்று முன்தினம் மாலை அவசர கூட்டத்தை நடத்தியுள்ளனர்.

இந்தக் கூட்டம் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்றுள்ளது.

சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர், உதய கம்மன்பில, டிரான் அலஸ் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும், சு.க.வின் எந்தப் பிரதிநிதியும் நேற்றுமுன்தினம் சந்திப்பில் பங்கேற்கவில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதிநிதிகள் பலருக்கும் பங்காளிக் கட்சிகளுக்கும் இடையில் சர்ச்சைக்குரிய சூழ்நிலையின் பின்னணியில் இந்த பேச்சு இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் மோசமடைகிறது மனித உரிமைகள் நிலை!

## சர்வதேச மன்னிப்பு சபை குற்றச்சாட்டு

ஜெனிவா, பெப். 19

**நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் மீது இலங்கை அரசாங்கத்தினால் பிரயோகிக்கப்படும் அழுத்தம் காரணமாக நாட்டிற்குள் மனித உரிமைகள் நிலவரம் மிகவும் மோசமடைந்து வருவதை சர்வதேச சமூகம் புறக்கணித்துச் செயல்படக்கூடாது.**

மாறாக தண்டனை பெறுவதிலிருந்து விலகும் செயற்பாடுகளை முடிவிற்குக்கொண்டு வந்து, இலங்கை அரசாங்கத்தை முழுமையாகப் பொறுப்புக்கூற வைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் முனைப்புடன் செயற்பட வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

“புதிய ஆடைக்குள் இருக்கும் பழைய பிசாசு: மீண்டும் அச்சத்திற்குள் திரும்பிய இலங்கை” என்ற தலைப்பில் சர்வதேச மன்னிப்புச்சபையினால் வெளியிடப்பட்டுள்ள புதிய அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

விமர்சனங்கள் மற்றும் மாற்றுக்கருத்துக்களை முன்வைத்தல் மீது இலங்கை அரசாங்கத்தினால் புதிதாக விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள் சிவில் சமூகத்தின் சுதந்திரத்தின் மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதுடன் போரின் போது சர்வதேச சட்டங்களுக்கு முரணான வகையில் இடம்பெற்ற குற்றங்களுக்கு நீதி வழங்கப்படுவதிலும் தடைகளைத் தோற்றுவித்துள்ளன.

நாட்டில் இடம்பெற்ற மூன்று தசாப்தகால ஆயுதப் போராட்டத்தின் போது நடைபெற்ற குற்றங்களுக்கு எதிராகக் குரல்கொடுப்போரை அடக்குவதற்கும் இடைக்கால நீதிப்பொறிமுறைகளைத் தடை செய்வதற்குமான முயற்சிகளின்போது மனித உரிமை அமைப்புக்கள், ஊடகங்கள், சட்டத்தரணிகள், அரசியல் விமர்சகர்கள் உள்ளிட்ட தரப்பினர் இலங்கை அரசாங்கத்தினால் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அரசாங்கம் கடந்த வருடத்தில் சிவில் சமூக செயற்பாடுகளுக்கான இடைவெளியை வெகுவாக மாற்றிய மைத்துள்ளது. இது தற்போது விமர்சனங்கள் மற்றும் மாற்றுக்கருத்துக்களை முன்வைப்போர் மீது அதிகளவான கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் நிலையைத் தோற்றுவித்துள்ளது.

வெறுமனே அதிகாரிகளை அதிருப்திக்குள்ளாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டமை மற்றும் அத்தகைய கருத்துக்களை வெளியிட்டமை ஆகியவற்றுக்காக அனைத்து மட்டங்களிலும் உள்ள மக்கள் அச்சுறுத்தப்பட்டு, துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டு, சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

விமர்சனங்கள் மற்றும் மாற்றுக்கருத்துக்கள் ஆகியவற்றை முன்வைப்பதற்கு எதிராக இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். அத்தோடு கருத்துச்சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்றுகூடுதல், தனிப்பட்ட பாதுகாப்பிற்கான உரிமை, ஆதாரங்களின்றி தன்னிச்சையாகத் தடுப்புக்காவலில் வைக்கப்படுவதிலிருந்து சுதந்திரம் பெறல் ஆகியவை உள்ளடங்கலாக சர்வதேச சட்டங்களில் கீழுள்ள கடப்பாடுகளுக்கு அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டும்.

போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தல் ஆகியவை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலிருந்து கடந்த 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கை அரசாங்கம் விலகியது.

அதிலிருந்து நீதியை அணுகுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுப்பதுடன் நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் முயற்சிகளைத் தடை செய்யும் வகையிலேயே அதிகாரிகள் செயல்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இம்மாதம் 22 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 23 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூடும்போது, இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரினால் கடந்த மாதம் வெளியிடப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் மீது அரசாங்கத்தினால் பிரயோகிக்கப்படும் அழுத்தம் காரணமாக இலங்கையில் மனித உரிமைகள் நிலைவரம் மிகவும் மோசமடைந்து வருவதை சர்வதேச சமூகம் புறக்கணித்துச் செயற்படக் கூடாது.

மாறாக தண்டனை பெறுவதிலிருந்து விலகும் செயற்பாடுகளை முடிவிற்குக்கொண்டுவந்து, இலங்கை அரசாங்கத்தை முழுமையாகப் பொறுப்புக்கூறவைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்- என்றுள்ளது.




# ‘ரைம்ஸ்’ சஞ்சிகையில் கனடா ஈழத்தமிழ் யுவதி!

மொன்றியல், பெப். 19

கனடாவில் வசிக்கும் ஈழத்தமிழ் பின்னணி கொண்ட மைத்ரேயி ராமகிருஷ்ணனை பிரபல ‘ரைம்ஸ்’சஞ்சிகை அதன் அடுத்த நூறு (TIME100 Next) பிரபலங்களில் ஒருவராக மதிப்பிட்டிருக்கிறது. அரசியல், சுகாதாரம், பொழுதுபோக்கு, கலை, வர்த்தகம் போன்ற துறைகளில் எதிர்காலத்தை வடிவமைக்கப் போகின்ற முக்கிய நபர்களது பட்டியலிலேயே மைத்ரேயியின் பெயரும் இடம்பிடித்துள்ளது.

ரிக்ரொக், இன்ஸ்ரகிராம் போன்ற சமூகவலைத்தள வீடியோக்கள் ஊடாக உலகெங்கும் பதின்ம வயதினரிடையே புகழ் பெற்றிருந்த இளம் நடிகை மைத்திரேயி ராமகிருஷ்ணன் அண்மைக்காலமாகத் தொலைக்காட்சித் தொடர்கள் வாயிலாக அமெரிக்காவில் நன்கு அறியப்பட்டு வருகிறார். நெற்பிலிக்ஸில் (Netflix) ஒளிபரப்பாகி வரும் அமெ ரிக்காவின் பிரபல ‘Never Have I Ever’ என்னும் பதின்மப் பருவ நகைச்சுவைத் தொலைக்காட்சி நாடகத் தொடரில் பிரதான பாத்திரத்தில் தோன்றியதன் மூலம் அவர் மேலும் பிரபலம் அடைந்துள்ளார்.

19 வயதான மைத்ரேயியை கடந்த ஆண்டில் நியூயோர்க் ரைம்ஸ் அதன் ஆண்டின் சிறந்த நடிகர்கள் பட்டியலில் (New York Times’ annual list of the year’s best actors) சேர்த்திருந்ததமை குறிப்பிடத்தக்கது.

மைத்ரேயி ராமகிருஷ்ணனின் பெற்றோர்கள் போர் காரணமாக இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து கனடாவின் ஒன்ராறியோவில் வசித்து வருகின்றனர். தமிழர்கள் மீதான போரின் கொடுமைகள் காரணமாக மைத்ரேயி தன்னை ஓர் இலங்கையர் எனக் குறிப்பிடுவதைத் தவிர்த்து கனடிய தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர் என்றே அடையாளப் படுத்தி வருகிறார்.

# சுற்றுலாத்துறை நாட்டுக்கு மிக முக்கியமானதொன்று

## புதிய பயணத்திற்கு தயாராகுமாறு ஜனாதிபதி கோட்டாபய அழைப்பு

கொழும்பு, பெப். 19

சுற்றுலாத்துறை நாட்டிற்கு மிக முக்கியம் என்பதால் சவால்களை எதிர்கொண்டு, இந்தத் துறையில் புதிய பயணத்திற்கு தயாராகுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

சுற்றுலாத்துறையின் முன்னேற்றம் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே, ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

கொவிட்- 19 தொற்று நோயை எதிர்கொண்டு, பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக விதிக்கப்பட்ட சுகாதார கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்க அரசாங்கம் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக ஜனாதிபதி



இதன்போது கூறினார்.

அத்தோடு, சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் அவர்கள் அந்தந்த நாடுகளுக்குச் செல்லும்போது அவர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை கணக்கில் எடுத்துக் கொள்ளவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

அரசாங்கம் ஏற்கனவே தேவையான நிவாரணங்களை வழங்கியுள்ளதால், சரியான உத்திகளின் கீழ் எதிர்கால இலக்குகளை அடைய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக தொழில் முனைவோர் இதன்போது தெரிவித்தனர்.

இதன்போது, கொரோனா தடுப்பூசியை வழங்கும்போது ஹோட்டல் ஊழியர்கள், சுற்றுலா வழிகாட்டிகள் மற்றும் சாரதிகள் உள்ளிட்ட ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

சுற்றுலாப் பயணிகள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்படாத நிலையில், வசதிகளை பெற்றுக்கொடுப்பவர்களை தனிமைப்படுத்த வேண்டிய அவசியம் இல்லையென இதன்போது யோசனை முன்வைக்கப்பட்டது.

# சர்வதேச விசாரணையை இலங்கை அனுமதிக்காது!

## கோட்டாபய அரசு திட்டவட்டம்

கொழும்பு, பெப். 19

இலங்கையில் இடம்பெற்ற தாகக் கூறப்படும் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்கான சர்வதேச பொறிமுறைக்கு இலங்கை ஒரு போதும் அனுமதிக்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில் நடைபெற்ற வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச பொறிமுறை தொடர்பில் அரசின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்று வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டின் வெளியுறவுக் கொள்கையில் அரசியல் கட்சிகளுக்கிடையே மாற்றுக் கருத்துகள் இருந்தாலும், நாட்டுக்கு எதிரான அழுத்தங்கள் சர்வதேச அரங்கில் முன்வைக்கப்படும் போது, அனைவரும் ஒருமித்த நிலைப்பாட்டில் இருக்க வேண்




டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

சர்வதேச ரீதியில் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஸ்பெயின், ருமேனியா ஆகிய நாடுகளில் தூதரகங்களை அமைப்பதற்கும் மடகஸ்காரில் தூதரக அலுவலகமொன்றை அமைப்பதற்கும், லீக்கின்ஸ்டைன் நாட்டுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன மேலும் குறிப்பிட்டார்.






# எடப்பாடிக்கு அதிர்ச்சி தரும் 47 தொகுதிகள்

## தென் மாவட்டங்களில் என்ன நிலவரம்?

- ஆ. விஜயானந்த் -

தமிழக சட்டமன்ற தேர்தலில் தென் மாவட்டங்களில் அ.தி.மு.கவுக்கு பெரும் சரிவு ஏற்படலாம் என்ற ரீதியிலான கணக்கெடுப்பு முடிவு ஒன்று அ.தி.மு.க தலைமையிடம் அளிக்கப்பட்டுள்ளது. சசிகலா வருகை, அ.ம.மு.க தனித் துப் போட்டி போன்றவை பிரதான காரணங்களாக முன்வைக்கப்படுகின்றன. என்ன நடக்கிறது தென்மண் டல அ.தி.மு.கவில்?

**என்ன செய்கிறார் சசிகலா?**

பெங்களூரில் இருந்து தமிழகம் திரும்பிய சசிகலா, சென்னை தியாகராய நகரில் உள்ள இளவரசியின் மகள் வீட்டில் ஓய்வெடுத்து வருகிறார். கொரோனா தொற்றில் இருந்து அவர் முழுமையாக குணமடைந்துவிட்டாலும் 7 நாள்கள் தனிமைப்படுத்திக் கொண்டார். இதன் காரணமாக தன்னைச் சந்திக்க விரும்பிய கட்சி நிர்வாகிகளுக்கும் அவர் அனுமதி கொடுக்கவில்லை. தி.நகரில் அவர் தங்கியுள்ள வீட்டுக்கு இரண்டு நாள்களுக்கு ஒருமுறை தினகரன் சென்று சந் தித்துப் பேசி வருகிறார். நாளிதழ்களைப் படிப்பது, தொலைக் காட்சிகளில் செய்திகளைக் கவனிப்பது என மிகுந்த மௌனத்தை சசிகலா கடைப்பிடித்து வருகிறார். அவரது ஒவ்வொரு நகர்வையும் ஆளும்கட்சி உன்னிப்பாகக் கவனித்து வருகிறது.

'கொங்கு மண்டலத்திலும் வட மாவட்டங்களிலும் ஓரளவுக்கு தொகுதிகளைக் கைப்பற்றலாம் என்றாலும், தென் மண்டலத்தில் கௌரவமான இடங்களை வெல்வாமா?' என்ற அச்சம், அ.தி.மு.க தரப்பில் ஏற்பட்டுள்ளது. சசிகலா வருகையையொட்டி சென்னையில் உள்ள தலைமை அலுவலகம் மட்டுமல்லாமல், தொகுதியில் உள்ள கட்சி அலுவலகங்களையும் அ.தி.மு.க நிர்வாகிகள் பூட்டி வைத்ததும் தொண்டர்கள் மத்தியில் விவாதப் பொருளாக மாறியது. இந்நிலையில், தென்மண்டல சூழல்கள் குறித்து சில தனியார் நிறுவனங்கள் மூலம் விரிவான கணக்கெடுப்பு ஒன்றை எடுத்துள்ளது, அ.தி.மு.க தலைமை. கொங்கு மண்டல அமைச்சர் ஒருவரின் ஏற்பாட்டில் இந்த கணக்கெடுப்புப் பணிகள் நடந்துள்ளன.

**அதிர்ச்சி கொடுத்த கணக்கெடுப்பு**

"முதல்வரின் ஆட்சி தொடர்பான கேள்விகள் கணக்கெடுப்பில் இடம்பெற்றாலும் தென்மண்டலத்தில் உள்ள சமூக வாக்குகள் குறித்த கேள்விகளாக பிரதானமாக வைக்கப்பட்டன. மக்களிடம் கேட்கப்பட்ட 20 கேள்விகளில் சமூக வாக்குகள் தொடர்பான கேள்விகளுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டன. எடப்பாடி பழனிசாமியின் ஆட்சி, பா.ஜ.க கூட்டணியில் இருப்பது, தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு, சசிகலா வருகை ஆகியவை தொடர்பான கேள்விகள் இடம்பெற்றிருந்தன" என்கிறார் தென்மண்டல அ.தி.மு.க நிர்வாகி ஒருவர். பெயர் குறிப்பிட விரும்பாமல் பிபிசி தமிழிடம் சில தகவல்களைப் பட்டியலிட்டார்.

"திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள நாடார் சமூக வாக்குகள் அ.தி.மு.க பக்கம் வருவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு. ஏனென்றால், வணிகர்கள் ஜெயராஜும் பென்னிக்ஸும் பொலிஸ் காவலில் தாக்கப்பட்டு உயிரிழந்தமை, துப்பாக்கிச் சூடு உள்ளிட்டவை பிரதான காரணங்களாக உள்ளன. நாடார் சமூகத் தலைவர்கள் பலரும் பா.ஜ.க பக்கம் ஒன்றிணைந்து செயல்பட்டாலும் பணமதிப்பிழப்பு, ஜி.எஸ்.டி உள்ளிட்ட காரணங்களால் அந்தச் சமூக வணிகர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இது அ.தி.மு.க அணிக்கு பெரும் சரிவை ஏற்படுத்தலாம்" என்கிறார்.

**தேவேந்திரகுல வேளாளர் வாக்கு**

தொடர்ந்து பேசுகையில், "தென்மாவட்டங்களில் தேவேந்திரகுல வேளாளர் சமூகத்துக்கு கொடுக்கப்பட்டுள்ள அங்கீகாரம், அ.தி.மு.க அணிக்கு எந்தளவுக்கு வெற்றியைத் தேடித் தரப் போகிறது என்பது முக்கியமானவை. ஹபுதிய தமிழகம்' கிருஷ்ணசாமியின் முன்னெடுப்பால் இது சாத்தியமானது என்றாலும், அவருக்கு ஒட்டப்பிடாரம் தாண்டி செல்வாக்கு இருக்கிறதா என்பதுவும் முக்கியமான கேள்வி. அடுத்ததாக முக்குலத்தோர் வாக்குகள் அ.தி.மு.க அணிக்கு வருவதற்கான வாய்ப்புகளும் குறைவு. சசிகலா, தினகரனை ஓரம்கட்டிய விவகாரம், பிரமலைக் கள்ளர் சமூக மக்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. மறவர் சமூக மக்களும், ஓ.பி.எஸை தங்கள் சமூகத்தின் அடையாளமாகப் பார்க்கவில்லை. ஓ.பி.எஸ்ஸிடம் இருந்த ஆட்சி அதிகாரம் கொங்கு வேளாளர் பக்கம் சென்றதிலும் அவர்களுக்கு வருத்தம்தான். நிலவரம் இதைத்தான் பிரதிபலிக்கிறது" என்கிறார்.

**கனிமொழி பிரசாரம்**

மேலும், "கனிமொழியின் தொடர் பிரசாரத்தால் உள்ளூர் அமைச்சர்கள் கடும் கோபத்தில் உள்ளனர். அவரது பிரசாரம் தென்மண்டலத்தில் பெரும் வரவேற்பைப் பெற்று வருகிறது. கொங்கு மண்டல கருத்து கணிப்பீட்டில் மின்வெட்டு தொடர்பான கேள்விகளே பிரதானமாக இருந்தன. காரணம், 2006-11 தி.மு.க ஆட்சியை நினைவூட்டும் வகையில் அங்கு கேள்விகள் கேட்கப்பட்டன. இங்கு இபிஎஸ்-ஓபிஎஸ் பற்றிக் கேட்டபோது, 'ஓ.பி.எஸ் அடங்கிப்போய்விட்டார் இபிஎஸ் தலைவராக வந்துவிட்டார்' என மக்கள் தெரிவித்துள்ளனர். அதேநேரம், சசிகலா வருகையால் 47 தொகுதிகள் வரையில் பாதிப்பை ஏற்படுத்தலாம் எனவும் ஒவ்வொரு தொகுதியிலும் 3 முதல் 4 சதவிகித வாக்குகளை அவர்கள் பிரிப்பார்கள் எனவும் சர்வே முடிவில் தெரிய வந்துள்ளது" என்கிறார்.

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாகவும் சர்வே எடுக்க வந்தவர்களிடம் மக்கள் வெளிப்படையாகப் பேசியுள்ளனர். 'அரசுக்கு தெரியாமல் நடக்க வாய்ப்பில்லை' எனச் சிலரும் 'தொலைக்காட்சிகளில் பார்த்துதானே முதல்வர் தெரிந்து கொண்டார்' எனவும் தெரிவித்துள்ளனர். '3 வருடங்களாகிவிட்டதால் இந்தச் சம்பவத்தை மக்கள் மறந்திருப்பார்கள்' என்ற அ.தி.மு.கவின் கணிப்பும் பொய்த்துப் போய்விட்டது. மேலும், அமைச்சர் ராஜேந்திர பாலாஜி பேசிய சமூக ரீதியான சில விஷயங்கள், கடம்பூர் ராஜூவின் ஆதரவாளர்களாக இருந்த சிலர் விலகியது போன்றவை பெரிய மைனஸாக உள்ளதாகவும் அ.தி.மு.க தலைமைக்கு அறிக்கையாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

**மைனஸ் இல்லை**

இதில், குறிப்பிடப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், இந்த ஆட்சிக்கு பெரியளவில் எந்த எதிர்ப்பும் இல்லை. திராவிடக் கொள்கைகளை முன்னெடுக்கும் மக்களைத் தவிர, ஆட்சி குறித்த எதிர்ப்பு பெரிதாக இல்லை. பத்தாண்டு கால ஆட்சி என்பது மட்டுமே மைனஸாகப் பார்க்கப்படுவதாகவும் கருத்துக்கணிப்பு விவரங்கள் தெரிவிக்கின்றன. 'இதனை அடிப்படையாக வைத்து தென்மாவட்டங்களில் வாக்குகளைக் கவர்வதற்கு சில அதிரடி அறிவிப்புகளை முதல்வர் வெளியிடுவார்' எனவும் அக்கட்சியின் நிர்வாகிகள் பேசி வருகின்றனர்.

அ.ம.மு.கவால் அ.தி.மு.கவுக்கு தென்மாவட்டங்களில் பாதிப்பு ஏற்படுமா?' என அ.ம.மு.க செய்தித் தொடர்பாளர் காசிநாத பாரதியிடம் கேட்டபோது, தென்மண்டலத்தில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதுமே அ.தி.மு.க கூட்டணிக்கு பாதிப்பை ஏற்படுத்தும். குறிப்பாக, பெங்களூரில் இருந்து சின்னம்மா வந்தபோது, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இருந்துதான் அதிகப்படியான வாகனங்கள் அணிவகுத்தன. கடந்த எம்.பி தேர்தலில் டி.டி.வி. தினகரன் பிரசாரம் மேற்கொண்டதிலேயே அதிகக் கூட்டம் சேர்ந்தது கள்ளக்குறிச்சியில்தான்" என்கிறார்.

**சாதிக்கு அப்பாற்பட்ட ஈர்ப்பா?**

தொடர்ந்து அவர் பேசுகையில், "நேற்று முன்தினம் சி.வி.சண்முகத் துக்குப் பதில் கொடுக்கும் வகையில் விழுப்புரத்தில் கூட்டம் நடத்தினோம். மாநிலம் முழுவதும் சாதிக்கு அப்பாற்பட்ட ஈர்ப்பு சின்னம்மா மீது உள்ளது. ஓ.பி.எஸ்ஸுக்கு தேனி மாவட்டத்திலேயே தனிப்பட்ட செல்வாக்கு என்பது இல்லை. சொந்த மாவட்டத்திலேயே அவருக்கு எதிர்ப்புகள் அதிகம் உள்ளன. தி.மு.க, அ.தி.மு.கவுக்கு அடுத்து ஊராட்சி வாரியாக மாநிலம் முழுவதும் கிளை அமைப்புகளைக் கொண்ட கட்சியாகவும் அ.ம.மு.க உள்ளது. எனவே, அனைத்து தொகுதிகளிலும் அ.தி.மு.கவுக்கு பாதிப்பு ஏற்படும்" என்கிறார்.

**ஓ.பி.எஸ்ஸின் செல்வாக்கு?**

"அ.தி.மு.க என்ன செய்யப் போகிறது?" என அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் பெங்களூர் புகழேந்தியிடம் கேட்ட போது, கடந்த பாராளுமன்றத் தேர்தலில், 'பிரதமர் மோடியா.. ராகுலா?' என்ற பேச்சு எழுந்தபோது, தி.மு.க அணிக்கு மக்கள் வாக்களித்தனர். இதன் காரணமாக தேனியைத் தவிர்த்து அனைத்து தொகுதிகளிலும் அ.தி. மு.க அணி வெற்றி வாய்ப்பை இழந்தது. ஆனால், தேனி தொகுதியில் அ.தி.மு.கவை தோற்கடிக்க முடிய வில்லை. துணை முதல்வரின் மகன் ரவீந்திரநாத் வெற்றி பெற்றார். அங்கு காங்கிரஸ் சார்பாகப் போட்டியிட்ட ஈ.வி.கே.எஸ். இளங்கோவனும் அ.ம.மு.க சார்பில் போட்டியிட்ட தங்க தமிழ்ச்செல்வனும் தோற்கடிக்கப்பட்டனர். எனவே சொந்த சமூக மக்களின் பாராட் டைப் பெற்ற தலைவராகவே ஓ.பி.எஸ் இருக்கிறார்" என்கிறார்.

"தென்மாவட்டத்தில் ஓ.பி.எஸ்ஸுக்கு செல்வாக்கு இல்லை என்கிறார்களே" என்றபோது, "அப்படியொரு வதந்தியைப் பரப்பிவிடுகிறார்கள். அவரது செயல்பாடுகளை மக்கள் வரவேற்கிறார்கள். அ.ம.மு.கவால் 47 தொகுதிகளில் பாதிப்பு ஏற்படலாம் என்றொரு பேச்சும் வலம் வருகிறது. தென்மாவட்டங்களைப் பொறுத்தவரையில் சசிகலா மீது பரிவு இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. சசிகலா வருகைக்குப் பின்னால் அ.ம.மு.கவுக்கு பெரும் சரிவு ஏற்பட்டுவிட்டது. சிறையில் இருந்து வந்த பிறகு எதையும் பேசாமல் அவர் அமைதியாக இருக்கிறார். அவர் எந்தக் கொடியைப் பிடிக்கப் போகிறார். அ.ம.மு.கவா, அ.தி.மு.கவா என்பதில் அவர்களுக்குள்ளேயே குழப்பம் உள்ளது. எனவே, இந்தத் தேர்தலில் எங்கள் அணி மாபெரும் வெற்றி பெறும்" என்கிறார்.

**எந்த வகையில் பின்னடைவு?**

"தென் மாவட்ட தேர்தல் நிலவரம் எப்படி அமையும்?" என மூத்த பத்திரிகையாளர் என்.அசோகனிடம் கேட்ட போது "தென்மாவட்டங்களைப் பொறுத்தவரையில் பொதுவாக அ.தி.மு.கவுக்கு செல்வாக்கான பகுதிகள் என்றே கருதப்படுபவை. எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் சென்னையைத் தவிர்த்துவிட்டு தெற்கே உள்ள தொகுதிகளில் நின்று வெல்வார்கள். பாரம்பரியமான அ.தி.மு.க ஆதரவாளர்கள் இருக்கும் இடமாக மதுரை உள்ளிட்ட தென்மாவட்டங்களைக் கருதலாம். இதற்கேற்ப, அப்பகுதியிலிருந்து ஓ.பன்னீர்செல்வம் முதல்வர் ஆனதும் சாத்தியமானது" என்கிறார்.

தொடர்ந்து பேசுகையில், "டி.டி.வி தினகரன் தலைமையில் அ.ம.மு.க என அ.தி.மு.க உடைந்திருக்கும் நிலையில் சாதிய வேறுபாடுகள் கூர்மை அடைந்து இந்தத் தேர்தலில் வலுவாக எதிரொலிக்கும் வாய்ப்புகள் உண்டு. நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல்களில்கூட எதிர்க்கட்சியான தி.மு.கவே தென் மாவட்டங்களில் அ.தி.மு.கவை விட அதிகமான இடங்களைக் கைப்பற்றியுள்ளது. பா.ஜ.க கூட்டணியால் சிறுபான்மை வாக்குகள் விலகுவது, சாதி ரீதியாக ஏற்பட இருக்கும் பிளவுகள், முதல்வர் வேட்பாளர் ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்துடன் அடையாளப்படுத்தப்படுவது போன்றவை தென் மாவட்டங்களில் அ.தி.மு.கவுக்குப் பின்னடைவை ஏற்படுத்தலாம். சிறையிலிருந்து வெளியே வந்திருக்கும் சசிகலா எடுக்கவிருக்கும் முடிவுகளும் இதில் முக்கிய பங்கு வகிக்கும்" என்கிறார்.

'அ.தி.மு.கவில் வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்பட்டதும், சீற் கிடைக்காத பலர் சசிகலா பக்கம் செல்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. தவிர, அ.ம.மு.க வேட் பாளர்கள் அனைவருமே குக்கர் சின்னத்தில் நிற்பதும் அ.தி.மு.கவுக்குப் பெரும் பலவீனமாக அமையும். தேர்தலுக்குப் பிறகு சசிகலா கை ஓங்குமா.. எடப்பாடியின் கரம் கட்சியில் வலுப்படுமா என்பது தெரிந்துவிடும்" என்கின்றனர் அரசியல் ஆய்வாளர்கள்.

# மனித உரிமைகள் பேரவையில் நடைபெறப் போவது என்ன?

கிஹான் குணதிலக




இலங்கையில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இந்த வருடம், பின் அடுத்த வருடம் என, ஒவ்வொரு வருடமும் குறைபாடுடையதும் அதிக அரசியல் மயப்படுத்தப்பட்டதுமான அரசமனித உரிமைப் பொறிமுறையொன்றின் மீது ஏன் திரும்பத் திரும்ப தங்களது நம்பிக்கையை வைக்கிறார்கள்? மனித உரிமைத் தளத்தில் பணியாற்றும் எங்களில் பலருக்கு, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையுடன் (யு.என்.எச்.ஆர்.சி) ஈடுபடும் ஒரு நீண்ட வரலாறு உள்ளது. என்னுடையது 2008 இல் ஆரம்பமானது, அப்போது உலகம் முழுவதுமாக மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மற்றும் முன்னேற்றுவதற்கும் ஸ்தாபிக்கப்பட்ட அமைப்பு பற்றி புதிதாக அறிந்து கொள்வதில் ஜெனிவாவில் நான் நேரம் செலவளித்தேன்.

அநேகமான சமயங்களில் (எந்நேரமுமல்ல), பேரவை ஓர் அரங்கமாக மாற்றமடையும். பாத்திரம் வகிப்போர்கள் தங்களது பாத்திரத்தை நடிப்பர். 'நல்ல நாடுகள்', கெட்ட நாடுகள்'

மற்றும் 'நடுநிலை நாடுகள்' தங்கள் சம்பந்தப்பட்ட முக்கிய கதாபாத்திரங்களை நடிக்கும். ஐ.நா. பணியாளர்கள், சர்வதேச அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் மற்றும் உள்ளூர் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் துணைப் பாத்திரங்களை ஏற்பர் - அவர்களில் பலரும் மனித உரிமைகள் நோக்கத்திற்காக நேர்மையான வகையில் பற்றுறுதி கொண்டவர்கள். வேறு சிலரோ பாத்திரம் வகிப்பதற்குக் கூட அழைக்கப்படுவதில்லை. இந்த செயல்முறை குறித்து எங்களில் பலரும் அதிகம் அதிருப்தி கொள்ளத் தொடங்கினோம். ஏனெனில், இந்த நாடகத்தின் நிறைவில், நாங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் - மனித உரிமைகள் துஷ்பிரயோகங்களின் பாதிப்புக்குள்ளானோர்களுக்கு என்ன உறுதியான நன்மை பெறப்பட்டது என நாங்கள் வினவிக் கொண்டோம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது அமர்வும், அதன் முந்தியவற்றுக்கு வேறுபாடானதொன்றல்ல. மேடையில் மீண்டும் வேறுபட்ட நடிகர்களை நாங்கள் காண்போம். அமர்வின் திரை மூடும் பொழுது, அங்கே வெளிச்சங்களும், புகைச்சல்களும் இருக்கும், சீர்கெட்டுக் கொண்டிருக்கும் மனித உரிமைகளின் இடர்நிலைக்கு மீளும் ஆபத்தை நாங்கள் எதிர்கொள்ளுவோம்.

துஷ்பிரயோகங்களுக்கான இலங்கையின் பொறுப்புக்கூறலுக்காக தொடர்ந்து முயற்சிப்போர்கள் #HRC46 மூலமாக இலங்கையில் நிலைபேறான சீர்திருத்தத்தை உறுதிப்படுத்திக் கொள்வதில் ஒரு மெல்லிய வாய்ப்பினை மட்டுமே கொண்டிருப்பர். அர்த்தமுள்ள சீர்திருத்தம், கடந்தவற்றை எண்ணி நல்லிணக்கமும் பொறுப்புக்கூறலும் இலங்கைக்கு மிக முக்கியமானது என இனவாதம் கொண்ட பெரும்பான்மைச் சமூகத்தை நம்பவைக்கும் நேர்மையான அரசியல் விருப்பை அல்லது துணிவைத் தேவைப்படுத்துவதாக அமையும். இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவைச்செயல்முறை எமக்கு ஒரு தொகை பொய்யான வாக்குறுதிகளைத் தந்துள்ளது. முன்னைய நிர்வாகத்தால் பேணப்பட்ட சிறிய வாக்குறுதிகள் கூட இலகுவாக புறந்தள்ளப்பட்டன. நாங்கள் கோரிநிற்கும் உண்மையான சீர்திருத்தம் இதுவாயின், #HRC46 அதனை உறுதிப்படுத்துவதற்கான அமர்வல்ல. அப்படியானால், இந்தச்செயல்முறையில் பயனேதும் உள்ளதா எனக் கேட்பது சரியானதா?

முற்றிலுமாக அவ்வாறில்லை. #HRC46 உண்மையில் எதற்கானது என நாங்கள் விளங்கிக்கொள்ளும் வரை, இலங்கையில் மனித உரிமைகள் உறுதிப்படுத்தப்பட முடியுமென அக்கறை கொள்வோர்களுக்கு உறுதியான சில நன்மைகள் அங்கே இருக்கிறது. #HRC46 கவனத்தைப் பெற்றுக் கொள்வது குறித்தானது. அது மேடையிலுள்ள நடிகர்களைப் பற்றி மட்டுமானதல்ல, அவர்கள் மீது வீசும் வெளிச்சம், மற்றும் கூர்ந்து அவதானித்துக் கொண்டிருக்கும் பார்வையாளர்கள் பற்றியும் ஆனவொன்றாகும். மேடையில் நீங்கள் உள்ள போது, நீங்கள் திறந்த அரங்கில் செயற்பட வேண்டும். மேலும், ஒளி வீச்சின் கவனம் உங்கள் மீது இருக்கும் போது, உங்களது சிறந்த செயற்பாட்டை காண்பிப்பதற்கு நீங்கள் முயல்வீர்கள். #HRC46 சீர்திருத்தத்தை எங்களுக்குத்தராவிட்டாலும், அது அதற்கான ஓர் இடைவேளையை எங்களுக்குத் தரலாம்.

ஒளி வீச்சின் கவனத்தின் கீழ், மோசமான கண்டனங்களைத் தவிர்ப்பதற்கு இலங்கை அநேகம் (சிறிதளவாகிலும் கூட) முயலலாம். குறைந்ததளவிற்காகிலும் புத்தியுடைய அரசியல்வாதிகள் நடைமுறை அழுத்தத்திற்கு பதிலிறுப்பர், மேலும் புத்திசாலியான அரசியல்வாதிகளால் நிர்வகிக்கப்படும் அரசாங்கம் ஒரு கண்காணிப்பின் கீழுள்ள போது சிறந்த முறையில் நடந்து கொள்வதற்கு முயலும். இந்தக் கவலையான நிஜத்தையே நாங்கள் எல்லாச் சமயங்களிலும் கண்டுள்ளோம். இலங்கையின் மனித உரிமைகள் பதிவு 2012 மற்றும் 2018 இற்கிடையில் முன்னேற்றம் கண்டுள்ளது. மனித உரிமைகளுக்கான எந்த குறிக்காட்டியும் அதனை உறுதிப்படுத்தும். முன்னேற்றம் காட்டிய இப்பதிவு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நுணுக்குக் காட்டியின் கீழ் வந்த காலப்பகுதியுடன் இணங்கியதால், 2012 இல், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இலங்கை தொடர்பான ஒரு தீர்மானத்தை ஏற்று அங்கீகரித்தது. நான் இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கையில், அநேகம் இலங்கை கொண்டிருந்ததான அரசியல்வாதிகளுள் மிகவும் புத்திசாலியான, பிரதமர், வலிந்து தகனம் செய்யும் கொள்கையை அரசாங்கம் நீக்குமென நாடாளுமன்றத்தில் பேசும் போது அறிவித்தார் (அவரது அலுவலகம் தற்போது அதனை மறுத்துரைத்து வருகிறது). ICCPR சட்டத்தின் கீழ் நீதியற்ற முறையில் இலக்கு வைக்கப்பட்ட ஓர் எழுத்தாளர் மற்றும் கவிஞருமான சக்திக்க சத்குமார, இந்த வாரம் விடுதலை செய்யப்பட்டார். இந்த இரண்டு சம்பவங்கள் அல்லது சைகைகளின் நேரம் தற்செயலானதல்ல. இங்கு, #HRC46 பற்றிய அச்சம் அதன் பெறுமதியை நிரூபிக்கிறது.

எனவே, வேறொன்றும் இல்லையாயின், நாட்டில் தற்போது நடைபெற்று வரும் துஷ்பிரயோகங்களிலிருந்து சிறிய இடைவேளையை உறுதிப்படுத்துவதற்கு #HRC46 நாடகத்தின் இன் சாத்தியங்களை மனித உரிமை ஆதரவாளர்கள் தொடர்வார்கள் மற்றும் தொடருதல் வேண்டும். இச்செய்முறை வலிந்து தகனம் செய்யும் கொள்கையை முடிவுறுத்துவதற்கான வாய்ப்புகளை அதிகரித்துள்ளது. அது நிலப் பறிப்புகளை முடிவுறுத்துவதற்கு, ஊடக சுதந்திரத்தைப் பேணுவதற்கு மற்றும் ஹிஜாஸ் ஹிஸ்புல்லா போன்ற மனித உரிமைகள் பாதுகாவலரை விடுவிப்பதற்கான வாய்ப்புகளையும் அநேகம் அதிகரிக்கும். உள்நாட்டு ஆதரவு செயற்படுவதைக் காண முடியாத ஒரு பின்புலத்தில், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் தங்களது நம்பிக்கைகளை முழுமையல்லாத சர்வதேசப் பொறிமுறை மீது வைப்பது முற்றிலும் நியாயப்படுத்தப்படக் கூடியதே. இதற்கான கணிப்பு எளிமையானது: சிறு இடைவேளையை வழங்குவதற்கு அரசாங்கம் அநேகம் அழுத்தமளிக்கப்படும்.

சரியான விடயங்களைச் செய்வதற்கு, மனித உரிமை களை மதிப்பதற்கு மற்றும் பிரஜைகளை கௌரவத்துடன் நடத்துவதற்கு வெளி அழுத்தம் தேவை என அரசாங்கங்கள் நினைப்பது மகிழ்ச்சியானதல்ல. நாகரீக மடைந்த மற்றும் கௌரவமான எந்தவொரு சமூகமும், அதன் அரசாங்கம் சரியான காரியத்தை மேற்கொள்ள வைப்பதற்கு ஏன் வெளி அழுத்தங்களில் தங்கியிருத்தல் வேண்டும்? எங்களின் சமுதாயத்திலுள்ள பெரும்பான்மையானவர்கள் இந்த விடயங் களையிட்டு உண்மையில் கவனமெடுப் பதில்லை என்பதனையே இதற்கான சமன்பாடு குறிக்கிறது.

எனவே, இலங்கை எதிர்கொள்ளும் பெரும் சவால், அக்கறை யின்மை அல்லது கரிசனையின்மையாகும். இலங்கைக்குள் ஆழமான ஒரு பிளவை தடுப்பதற்கான ஓர் இடைவேளையே #HRC46 ஆகும்.

உண்மையாக உள்நோக்கிப் பார்க்கின்ற மற்றும் குடியியல், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார மனித உரிமைகள் மீது உள்ளக இணக்கப்பாடுகள் மற்றும் உண்மையான மனித அபிவிருத்தி என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கு முடிகின்ற அரசியல் தலைமைத்துவமே உண்மையில் எங்களுக்குத் தேவை. அவ்வாறான தலைமைத்துவம் எப்பொழுதாவது தோன்றினால், இலங்கை இந்தக் கட்டத்திலிருந்து ஒரே தடவையில் வெளிவந்துவிடும். அதுவரை, நாடகங்களின் சுழற்சியில் சீர்திருத்தத்திற்குப் பதில் இடைவேளை மாத்திரமே நிகழ்ச்சித்திட்டத்தில் உண்மையான ஒரு விடயமாக இருப்பதை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதற்கு முடியும்.

**"ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது அமர்வும், அதன் முந்தியவற்றுக்கு வேறுபாடானதொன்றல்ல. மேடையில் மீண்டும் வேறுபட்ட நடிகர்களை நாங்கள் காண்போம். அமர்வின் திரை மூடும் பொழுது, அங்கே வெளிச்சங்களும், புகைச்சல்களும் இருக்கும், சீர்கெட்டுக் கொண்டிருக்கும் மனித உரிமைகளின் இடர்நிலைக்கு மீளும் ஆபத்தை நாங்கள் எதிர் கொள்ளுவோம்."**

**HRC46: Not for Reform But for Respite என்ற தலைப்பில் கிறவுண்ட்விவ்ஸ் தளத்தில் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம்.**

### இழப்புக்களுக்கு நீதி கோரும்

# வடக்கு - கிழக்கு மக்களுக்கு உரியதீர்வு வழங்க வேண்டும்

**காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தை நீக்க அரசாங்கம் முயற்சிகளை முன்னெடுக்கின்றது. அனைத்து விடயங்களையும், அரசியல் கோணத்தில் கணிப்பதை அரசாங்கம் முதலில் தவிர்த்துக் கொள்ளவேண்டும். 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் தற்போது நியாயத்தை கோரி நிற்பதைப் போன்றே வடக்கு - கிழக்கு மக்களும் நியாயம் கோருகிறார்கள். எனவே, பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு உரிய தீர்வை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயரத்ன தெரிவித்தார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இனவாதம் மற்றும் வெறுப்புப் பேச்சு ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி அரசாங்கம் செயல்படுகின்றது. பல்லின சமூகம் வாழும் நாட்டில் ஓர் இனத்துக்கு மாத்திரம் அனைத்து விடயங்களிலும் முன்னுரிமை வழங்கும் போது தேவையற்ற பிரச்னைகள் தோற்றம் பெறும். வளர்ச்சி பெற்றுள்ள நாடுகள் அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்து அரசியல் மற்றும் சமூக மட்டத்தில் முன்னேறிச் செல்கின்றன. இதனை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும்.



பல்லின சமூகம் வாழும் நாட்டில் அனைத்து இன மக்களின் ஒத்துழைப்பு இருந்தால் மாத்திரமே நாடு அனைத்துத் துறைகளிலும் முன்னேற முடியும். தற்போதைய அரசாங்கம் பெரும்பான்மை இன மக்களுக்கு முன்னுரிமை வழங்குவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு தமிழ், முஸ்லிம் மக்களைப் புறக்கணித்து, இனவாதத்தைத் தூண்டி அதன்மூலம் தனது இயலாமையை மறைத்துக் கொள்கின்றது. அரசாங்கம் இனவாதத்தைத் தூண்டி விடுகின்றது என்பதை பெரும்பான்மையின மக்கள் நன்கு அறிவார்கள்.

காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் வீண் செலவுகளை ஏற்படுத்துகின்றது. அதனைத் தொடர்ந்து நடத்திச் செல்வது பயனற்றது என்று குறிப்பிட்டு அந்தக் காரியாலயத்தை நீக்க முயற்சிக்கின்றது. இது முற்றிலும் தவறான நோக்கமாகும். அனைத்துப் பிரச்னைகளுக்கும் அரசியல் நோக்கத்தின் அடிப்படையில் தீர்வு காண முடியாது. தமிழர்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண தற்போதைய அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனத் தெரிவித்தார். (எ)

---



# தமிழர் உரிமைகளை பெற்றுக்கொடுக்க சர்வதேசம் கவனம் செலுத்த வேண்டும்

### யாழ்ப்பாணம் வந்த சுவிஸ் தூதுவரிடம் இந்து மதத் தலைவர்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.19

தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதில் சர்வதேசம் அதிக கவனம் செலுத்தவேண்டும். அதில் சுவிற்சர்லாந்துக்கும் பொறுப்பு உண்டு என அந்த நாட்டுத் தூதுவரிடம் இந்து மதத் தலைவர்கள் வலியுறுத்தினர்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் டொமினிக் பேர்கலர், நல்லை ஆதீனத்துக்கு நேற்று முன்தினம் மாலை சென்றிருந்தார்.

நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், இந்துக் குருமார் ஒன்றியத்தைச் சேர்ந்த பிரம்ம ஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர், கலாநிதி ஆறு.திருமுருகன் மற்றும் ஹவாய் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் சுவிஸ்சர்லாந்து தூதுவரைச் சந்தித்தனர்.

இதன்போது, வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் தற்போதைய பிரச்னைகள் தொடர்பில் சுவிஸ்சர்லாந்து தூதுவர் இந்து மதத் தலைவர்களைக் கேட்டறிந்தார்.

55 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எமது உறவுகளுக்கு அடைக்கலம் கொடுத்து அவர்களுக்கான உரிமைகளை வழங்கியுள்ள சுவிஸற்சர்லாந்துக்கு நன்றிகள் தெரிவிக்கின்றோம். அவர்கள் தமது மத வழிபாடுகளுக்கு ஆலயங்களை அமைக்க அனுமதித்துள்ளமையும் பாராட்டுக்குரியது.

அதேபோன்று இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கும் சகல உரிமைகளையும் கிடைக்க சுவிற்சர்லாந்து ஒத்துழைக்கவேண்டும் என்றும் இந்து மதத் தலைவர்கள் வலியுறுத்தினர். (எ)

---

# பா.ஜ.கவின் அறிவிப்பு குறித்து அரசு ஏன் மௌனம் காக்கிறது?

### சமிந்த விஜேசிறி கேள்வி

கொழும்பு,பெப்.19

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்காக இந்தியா போன்ற நாடுகளிடம் உதவிகளைப் பெற்றுக் கொண்டதாலா? பாரதிய ஜனதா கட்சியின் அறிவிப்பு தொடர்பில் அரசாங்கம் மௌனம் காக்கின்றது? எனக் கேள்வி எழுப்பியுள்ள ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, மக்களிடையே நல்லிணக்கத்தை சிதைத்து அதிகாரத்தை தக்க வைக்க அரசாங்கம் முயற்சிக்கக்கூடாது எனவும் குறிப்பிட்டார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு கேள்வியெழுப்பிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பாரதிய ஜனதா கட்சி இலங்கையில் அதன் செயல்பாடுகளை ஆரம்பிப்பதாகக் கூறுகின்ற போதிலும் அமைச்சர்களான உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ச உள்ளிட்டோர் மௌனமாக இருக்கின்றனர். 20 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் மூலமே இதற்கான வழி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. 20 இன் ஊடாக இலங்கைக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலிலிருந்து விலகிக் கொள்வதற்கு அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போகின்றது?

அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்காக இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளில் உதவிகளைப் பெற்றுக் கொண்டமையால் தான் இவர்கள் இவ்வாறு அமைதியாக இருக்கிறார்கள். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விவகாரத்தில் வெவ்வேறு நாடுகள் தொடர்புபட்டுள்ளமை தெரியவந்துள்ளது. அதன் உண்மைத் தன்மை வெளியாகிவிடும் என்ற அச்சத்திலேயே அரசாங்கம் மௌனமாக இருக்கிறது. இந்தியாவைப் புறக்கணித்து இலங்கையை சீன காலனித்துவ நாடாக மாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியில் கடன் பெற்று அபிவிருத்தித் திட்டத்தை சீனாவுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது - என்றார். (எ)




---

# ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு உதவிய மதரஸா பாடசாலை அதிபர் கைது

கொழும்பு,பெப்.19

சர்ச்சைக்குரிய மதரஸா பாடசாலை அதிபர் முஹமது ஷாகீல் என்பவரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்தனர்.

இந்தச் சந்தேக நபரை பொருத்தமான நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு சட்டமா அதிபர் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார் என சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பாளரும் சட்டத்தரணியுமான நிஷாரா ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலைத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளுக்காக கைது செய்யப்பட்டு சி.ஐ.டியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வுக்கு பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் உதவிய குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டார். (எ)

---

# ஓட்டோவுக்கு தீ வைத்த கும்பல் தப்பிச் சென்றது

### நவாலியில் சம்பவம்



யாழ்ப்பாணம்,பெப்.19

நவாலி அரசடி பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் நுழைந்த வன்முறைக்கும்பல் ஒன்று ஓட்டோ ஒன்றுக்குத் தீ வைத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இந்தக் கும்பலைத் துரத்திச் சென்ற இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் ஒன்றை மீட்டு மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த 5 பேர்கொண்ட கும்பலே இந்த அடாவடியில் ஈடுபட்டுள்ளது.

வன்முறைக் கும்பல் தப்பிச்சென்ற நிலையில் அந்தப் பகுதி இளைஞர்கள் துரத்திச் சென்றுள்ளனர். இதனால் மோட்டார் சைக்கிளை வீதியில் கைவிட்டுவிட்டு அந்தக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது.

அந்த மோட்டார் சைக்கிள் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்துள்ளனர். (எ-03)

# பா.ஜ.கவின் பிரதிநிதிகளாக கூட்டமைப்பினர் உருவாகலாம்

## சரத் வீரசேகர சொல்கிறார்



கொழும்பு,பெப்.19

**இந்திய ஆளும் பாரதிய ஜனதா கட்சியால் நேரடியாக இலங்கையில் அரசியல் கட்சியாக உருவாக முடியாது. ஆனால், அவர்களின் பிரதிநிதிகளாக இலங்கையில் ஒரு கட்சி உருவாகி அவர்களின் கொள்கைகளை இங்கு நடைமுறைப்படுத்த எந்தத் தடைகளும் இல்லை. அநேகமாக பாரதிய ஜனதா கட்சியின் இலங்கைப் பிரதிநிதிகளாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உருவாகலாம் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் அஸ்திரமாக இன்னமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயல்படுகின்றது என்பதில் மாற்றுக்கருத்தில்லை எனவும் அவர் கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்திய பாரதிய ஜனதா கட்சி இலங்கையிலும் ஆதிக்கம் செலுத்தும் என அமைச்சர் அமித் ஷா கூறியதாக வெளிவரும் செய்திகளில் உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் என எதுவும் இல்லை. நிகழ்வொன்றில் அவர் உணவு உட்கொண்ட வேளையில் அருகில் இருந்தவர்களுக்குக் கூறியதாக தெரிவிக்கப்படுகின்றது. அதற்காக நாம் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆனால், எனது தனிப்பட்ட நிலைப்பாட்டை என்னால் கூற முடியும். பாரதிய ஜனதா கட்சியால் நேரடியாக இலங்கையில் அரசியல் செய்ய முடியாது. அதற்கான அரசமைப்பு ரீதியிலான அனுமதியும் இல்லை. தேர்தல்கள் திணைக்களமும் அதற்கு அனுமதிக்க வாய்ப்புக்கள் இல்லை. எனவே, இது ஒரு கதையாக வேண்டுமானால் கூறலாம்.

ஆனால், இலங்கையில் அவர்களால் மறைமுக அரசியலில் ஈடுபட முடியும். அதற்கான அனுமதி இலங்கையில் உள்ளது. எவ்வாறெனின், இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகளில் ஏதேனும் ஒரு கட்சியினூடாக இலங்கையில் அவர்களின் கொள்கையைப் பரப்பி, அவர்களின் இலங்கைப் பிரதிநிதிகளாக இங்கு ஒரு கட்சி இயங்க முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்றொரு கட்சியை அவர்களின் பிரதிநிதிகளாக வைத்துக்கொள்ள முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை பொறுத்தவரை அவர்கள் இன்றுவரை இந்தியா மற்றும் ஏனைய நாடுகளின் பிரதிநிதிகளாக இலங்கையில் செயல்பட்டு வருகின்றனர். அவர்களுக்காக முழு நிதியும் மேற்கு நாடுகள் மற்றும் புலம்பெயர் அமைப்புக்களின் மூலமாகவும், புலிகளை ஆதரிக்கும் அமைப்புக்கள் மூலமாகவும் கிடைத்து வருகின்றது.

பா.ஜ.கவின் தேசிய கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக வாய்ப்புக்கள் உள்ளன. ஆனால், கட்சியை உருவாக்கினாலும் வாக்களிக்க வேண்டிய கடமை மக்களிடமே உள்ளது. அவர்களை மக்கள் ஆதரிக்க வேண்டுமே- என்றார். (எ)

# இலங்கை அரசாங்கம் மீது இந்தியா நிச்சயம் அழுத்தம் பிரயோகிக்கும்

## ஹேஷா விதானகே சுட்டிக்காட்டு

கொழும்பு,பெப்.19

யாழ். தீவுகளில் சீன மின் திட்டம் தொடர்வதை இந்தியா பார்த்துக் கொண்டிருக்காது. இந்தவிடயத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா நிச்சயம் அழுத்தம் பிரயோகிக்கும். இலங்கை மீது இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பு மேலும் அதிகரிக்கும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.

திருகோணமலை துறைமுகத்தையும் இந்தியாவுக்கு அல்லது வேறொரு நாட்டுக்கு வழங்க இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது எனத் தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தில் தேசிய சொத்துக்களை விற்க மாட்டோம் என்று கூறியுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தற்போது கிழக்கு முனையத்துக்குப் பதிலாக மேற்கு முனையத்தை வழங்கத் தீர்மானித்துள்ளார். யாழில் மூன்று தீவுகளில் சீன மின்திட்டம் ஆரம்



பிக்கப்படும் என்று அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இராமேஸ்வரத்துக்கு மிக அருகிலுள்ள தீவுகளில் சீனாவுக்கு வாய்ப்பளிப்பதை இந்தியா பார்த்துக் கொண்டிருக்காது. நிச்சயம் அழுத்தம் பிரயோகிக்கும். இதன் மூலம் இலங்கை மீது இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பு மேலும் அதிகரிக்கும். திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் ஏற்கனவே இந்தியா வசமுள்ள நிலையில், திருகோணமலை துறைமுகத்தையும் இந்தியாவுக்கு அல்லது வேறொரு நாட்டுக்கு வழங்க இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

தற்போதைய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை, பொருளாதாரக் கொள்கை மற்றும் சுபீட்சத்தின் நோக்கு என எதனையுமே புரிந்து கொள்ள முடியாமலுள்ளது. நல்லாட்சி அரசாங்கத்தில் எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கை மீது சர்வதேச அழுத்தங்கள் பிரயோகிக்கப்படவில்லை. பாரதிய ஜனதா கட்சி இலங்கையிலும் அதன் செயல்பாடுகளை ஆரம்பிக்கப் போவதாகக் கூறியுள்ள போதிலும் அது தொடர்பில் கலவரமடையத் தேவையில்லை என்று அரசாங்கம் கூறுகிறது.

திரிபுரா முதலமைச்சர் வெளியிட்ட கருத்துக்குப் பதில் கூற முடியாத நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது. இரட்டைப் பிரஜாவுரிமை விவகாரத்தின் மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் இவ்வாறான செயல்பாடுகளுக்கான வழியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது- என்றார். (எ)

ஈழநாடு
Online
சம்பவங்கள்,
செய்திகள்
உடனுக்குடன்
அறிந்துகொள்ள...
www.eelanadu.lk

# இலங்கையின் செயல்பாடுகளால் அமெரிக்கத் தூதுவர் அதிருப்தி



கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களை அடக்கம் செய்ய அனுமதிக்கும் வாக்குறுதியிலிருந்து இலங்கை பின் வாங்குவது தொடர்பில் அமெரிக்க அரசாங்கம் இன்று ஏமாற்றத்தையும், அதிருப்தியையும் வெளிப்படுத்தியுள்ளது.

இதுதொடர்பில் தனது ருவிட்டரில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ்:

பாரபட்சமான தகனக் கொள்கையை முடிவுக்குக் கொண்டுவருவதிலிருந்து அரசாங்கமும், பிரதமரும் பின்வாங்குவதைக் காணும்போது ஏமாற்றமும், அதிருப்தியும் ஏற்பட்டுள்ளது என்று பதிவிட்டுள்ளார்.

கொரோனா தொற்றால் உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழக்கப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பாராளுமன்றத்தில் முன்னர் அளித்த வாக்குறுதியை அலெய்னா டெப்லிட்ஸ் வரவேற்றதுடன், சர்வதேச பொதுச் சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்பவும், மதச் சடங்குகளுக்கு மதிப்பளிக்கும் விதமாகவும் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது ஒரு சாதகமான நடவடிக்கையாகும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

உடல் அடக்கம் தொடர்பான விவகாரத்தில் அமைச்சின் நிபுணர் குழு முடிவு செய்யும் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே பாராளுமன்றத்துக்குத் தெரிவித்த பின்னர் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரின் தற்போதைய அறிவிப்பு வெளிவந்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்ய இலங்கையில் அனுமதிக்கப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் அறிவித்த மறுநாள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே இந்த அறிவிப்பை வெளியிட்டார். (எ)



தென்னை பயிர்ச்செய்கை சபை மற்றும் தேசிய தமிழர் சக்தி என்பன இணைந்து பாடசாலை மாணவர்களுக்கு தென்னங்கன்றுகளை வழங்கும் செயல்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றன.

அந்த வகையில் நேற்று யாழ். உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

# சாரா உயிருடன் உள்ளாரா?

## சரத் வீரசேகர சந்தேகம்



கொழும்பு,பெப்.19

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புபட்ட சாரா என்பவர் இந்தியாவில் உள்ளாரா? என்பது தொடர்பில் இன்னும் உறுதியான தகவல்கள் கிடைக்கவில்லை. சாய்ந்தமருதில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் சாராவும் உயிரிழந்திருப்பதாகவே நம்பப்படுகின்றது. எனினும், இவற்றை உறுதிப்படுத்த மரபணு பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார். சாரா உயிருடன் இருப்பாரெனின் நிச்சயமாக அவர் கைது செய்யப்படுவார் எனவும் கூறினார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புபட்டதாகக் கூறப்படும் சாரா இந்தியாவில் உள்ளாரா? அங்கு இருப்பாரெனில் அவரைக் கைது செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லையா? என கேள்வி எழுப்பப்பட்ட வேளையில் அதற்குப் பதிலளிக்கையில் அமைச்சர் இவ்வாறு கூறினார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புபட்ட சாரா என்பவர் இந்தியாவில் உள்ளார் என்று கூறப்பட்ட போதிலும் இன்றுவரை அது உறுதிப்படுத்தப்படவில்லை. சாய்ந்தமருதில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் சாராவும் இருந்துள்ளார் என்றே புலனாய்வுத் தகவல்கள் கூறுகின்றன. எனவே, அவர் அந்தத் தாக்குதலில் இறந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. இதனை உறுதிப்படுத்தும் விதமாக மரபணு பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எவ்வாறு இருப்பினும் அவர் இந்தியாவில் உள்ளாரா? எனத் தெரியவில்லை. இந்தியாவிலிருந்து மீண்டும் அவர் இலங்கைக்கு வந்துள்ளார் என்ற தகவலும் எமக்குக் கிடைத்தது.

எனவே, நாம் இந்தியப் புலனாய்வுத்துறையுடனும், சர்வதேச பொலிஸாருடனும் இணைந்து இந்த விடயங்களை ஆராய்ந்து வருகின்றோம். இராஜதந்திர ரீதியிலும் இதுதொடர்பில் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றோம். ஆனால், சாரா இந்தியாவில் உள்ளாரா எனத் தெரியவில்லை. அவர் உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? என்பது தெரிந்தால் மட்டுமே அவரைக் கைது செய்வது தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும். அவர் உயிருடன் இருந்தால் நிச்சயமாக கைது செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுப்போம்- என்றார். (எ)

ஈழநாடு





## "மனித உரிமைகள் மீறலுக்கான விலையை சீனா கொடுக்கும்"

வாஷிங்டன், பெப். 19

மனித உரிமைகளுக்கான விலையை சீனா நிச்சயம் கொடுக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரித்துள்ளார்.

உய்குர் முஸ்லிம் மக்களுக்கு எதிராக ஏராளமான மனித உரிமைகள் மீறல் நடவடிக்கைகளில் சீனா ஈடுபடுகிறது என்று உலக நாடுகள் குற்றம் சுமத்தி வந்தன. இந்த நிலையில் இவ்விவகாரம் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு எச்சரித்தார்.

இதுகுறித்து ஜோ பைடன் கூறும்போது, "சீனா அடக்குமுறைகளில் ஈடுபடுவதை நான் நன்கு அறிவேன். சீனா அதன் மனித உரிமை மீறல்களுக்கான விலையை நிச்சயம் கொடுக்கும்" என்று தெரிவித்துள்ளார். (ஐ)

# இந்திய விவசாயிகள் நேற்று ரயில் மறியல் போராட்டம்

புதுடில்லி, பெப். 19

இந்தியாவில் ரயில் மறியல் போராட்டம் நேற்றுத் தொடக்கம் நடைபெற்று வருகிறது. புதுடில்லி நகரின் பெரும்பாலான இடங்களில் ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

புதுடில்லியின் எல்லைகளாக காஜிப்பூர், திக்ரி உள்ளிட்ட பகுதிகளில் போராடி வரும் விவசாய சங்கங்கள் பல்வேறு ரயில் நிலையங்களில் ரயில்கள் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். விவசாயிகளின் போராட்டத்திற்கு காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு அளித்துள்ளன.

இந்திய அரசு கொண்டுவந்த 3 வேளாண் சட்டங்களுக்கு எதிராக புதுடில்லியின் பல்வேறு எல்லைகளில் பஞ்சாப், ஹரியாணா, உத்தர பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் 80 நாள்களுக்கும் மேலாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையிலேயே போராட்டத்தின் அடுத்த கட்டமாக



விவசாயிகள் நேற்று ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜம்மு காஷ்மீர், பீகாரிலும் ரயில் மறியல் போராட்டங்கள் இடம்பெற்றன. அத்துடன் புதுடில்லி எல்லையில் போராடும் விவசாயிகள் திக்ரி, காஜிப்பூர் எல்லைகளில் ரயில் தண்டவாளங்களில் இருந்தவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தண்டவாளத்தில் குவிந்த விவசாயிகளை அகற்ற பொலிஸார் முயன்றதில் இரு தரப்பினரிடையேயும் தள்ளுப்பாடு ஏற்பட்டது. (ஐ)

## நைஜீரிய பாடசாலையில் 40 மாணவர்கள் கடத்தல்!

நைகர், பெப். 19

நைஜீரியாவில் தீவிரவாதிகள் பாடசாலைக்குள் நுழைந்து மாணவர் ஒருவரைச் சுட்டுக் கொன்றனர். அத்துடன், 40 மாணவர்களை கடத்தப்பட்ட அதிர்ச்சி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நைகர் மாகாணத்தின் காகரா நகரிலுள்ள பாடசாலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

40 மாணவர்களுடன் 3 ஆசிரியர்களும் கடத்தப்பட்டுள்ளனர். கடத்தப்பட்டவர்கள் அருகிலுள்ள காட்டுப்பகுதிக்கே கடத்திச் செல்லப்பட்டனர் என்று ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தச் சம்பவத்துக்கு எந்த அமைப்பும் உரிமை கோரவில்லை.

எனினும், அல்கொய்தா அமைப்புடன் தொடர்புடைய போகோ ஹராம் பயங்கரவாத அமைப்பே நைஜீரியாவில் அடிக்கடி இவ்வாறான சம்பவங்களில் ஈடுபடுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## கொரோனா பரவலுக்கு மத்தியில் ஜப்பானில் தற்கொலைகள் உச்சம்!

ரோக்கியோ, பெப். 19

கொரோனா தொற்று நோய்க்கு மத்தியில் உலகில் வேறு எங்கும் இல்லாத அளவுக்கு ஜப்பானில் தற்கொலைகள் அதிகரித்துள்ளன என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. இது தொற்று நோயுடன் போராடும் முழு உலகுக்குமான எச்சரிக்கை என்று உளவியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 11 ஆண்டுகளில் இல்லாத வகையில் 2020ஆம் ஆண்டு ஜப்பானில் அதிக தற்கொலை மரணங்கள் பதிவாகின என்று புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

ஜப்பானிய ஆண்கள் தற்கொலை செய்துகொள்ளும் வீதம் கடந்த ஆண்டு வீழ்ச்சியடைந்திருந்தாலும் பெண்கள் தற்கொலை வீதம் கடந்த ஆண்டு கிட்டத்தட்ட 15 வீதத்தால் உயர்ந்துள்ளது.

2019 ஒக்ரோபருடன் ஒப்பிடும்போது 2020 ஒக்ரோபரில் பெண்களின் தற்கொலை 70 வீதத்தால் அதிகரித்துள்ளது. இந்தக் காலப்பகுதியில் 879 பெண்கள் தற்கொலை செய்தனர்.

2008இல் நிதி நெருக்கடி காலத்திலும், 1990களின் முற்பகுதியில் பங்குச்சந்தை சரிவாலும் இது போன்ற மரணங்களை ஜப்பான் சந்தித்தது. ஆனால், அப்போது நடுத்தர ஆண்களே தற்கொலை செய்தனர்.

ஆனால், இப்போது கொவிட்-19 தொற்று நோய்க்கு மத்தியில் இள வயது ஆண்கள் மற்றும் பெண்கள் அதிக மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர். இதுவே அதிக தற்கொலை மரணங்களுக்கு காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இதேவேளை, பிரபலங்களின் தற்கொலைகளும் அதிகரித்து வருகின்றன. ஒரு பிரபலம் தற்கொலை செய்து கொண்டால் அது குறித்து ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் அதிகமாக விவாதிக்கப்படுகிறது. இது பாதிக்கப்பட்ட அவ்வாறான எண்ணம் கொண்டுள்ளவர்கள் மீது அதிக தாக்கத்தை ஏற்படுத்தி தற்கொலைக்குத் தூண்டுகிறது என்று உளவியல் நிபுணர்கள் தெரிவித்தனர். (ஐ)



## மலலாவுக்கு மீண்டும் மிரட்டல்

இஸ்லாமாபாத், பெப். 19

பெண்களின் கல்விக்காக போராடி வரும் பாகிஸ்தானின் மலலாவுக்கு ருவிட்டர் வலைத்தளம் ஊடாக பயங்கரவாதிகள் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

9 ஆண்டுகளுக்கு முன்னர், 14 வயது சிறுமியாக இருந்த மலலா மீது தலிபான் பயங்கரவாதிகள் துப்பாக்கி சூடு நடத்தினர். இதில் அவர் படுகாயமடைந்தார்.

தலையில் குண்டுபாய்ந்த நிலையில் உயிருக்குப் போராடியவருக்கு பிரிட்டன் சிகிச்சை அளித்து காப்பாற்றியது. தற்போது அவர் அங்கேயே குடும்பத்தினருடன் தங்கியுள்ளார்.

இந்நிலையில், மலலாவை சுட்ட இஷானுல்லா என்ற தலிபான் பயங்கரவாதி சிறையிலிருந்து தப்பி சென்றுள்ளார். தற்போது தலைமறைவாக இருக்கும் அவர் ருவிட்டர் மூலம் மலலாவுக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

அதில், "மலாலா மீண்டும் பாகிஸ்தானுக்கு திரும்ப வேண்டும். மலாலாவுடனும் அவரது தந்தையுடனும் தீர்க்கப்படாத பிரச்னை ஒன்று நிலுவையில் உள்ளது. இந்த முறை நிச்சயமாக எங்களது குறி தப்பாது", என்று பகிரங்கமாக மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பேஸ்புக் மூலம் செய்தி தளங்களுக்கு அவுஸ்திரேலியர்கள் நுழைய தடை!

சிட்னி, பெப். 19

அவுஸ்திரேலிய பயனாளர்கள் பிரவேசிக்க முடியாத வகையில் அனைத்து உள்ளூர் மற்றும் சர்வதேச செய்தி தளங்களை பேஸ்புக் நிறுவனம் முடக்கியுள்ளது. இதனால் பேஸ்புக் ஊடாக செய்தித் தளங்களுக்குள் பிரவேசித்து செய்திகளை வாசித்தல், அவற்றைப் பகிர்தல் போன்ற சேவைகளை அவுஸ்திரேலியர்கள் இனி பெற முடியாது.

இந்த நடவடிக்கைக்கு அவுஸ்திரேலிய அரசு கண்டனம் தெரிவித்துள்ளது. இதன்




மூலம் பேஸ்புக் நம்பகத்தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுகிறது என்றும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்தத் தடை மூலம் அவுஸ்திரேலியாவுக்கு வெளியே உள்ளவர்களும் அவுஸ்திரேலியா தொடர்பான செய்திகளை அணுக முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியாவில் முன்மொழியப்பட்ட புதிய ஊடக சட்டம் தொடர்பில் அவுஸ்திரேலிய அரசுக்கும் பேஸ்புக் நிறுவனத்துக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடுகளை அடுத்து இந்தத் தடை அமுலாகியுள்ளது.

கொரோனா தாக்கத்தால் ஊடகங்கள் விளம்பர வருமானங்களை இழந்துள்ளன. இந்நிலையில் செய்திகளை வெளியிட்டு டிஜிற்றல் தளங்கள் வருமானமீட்டுகின்றன என்று அவுஸ்திரேலியா சாடியுள்ளது. இதையடுத்து அவுஸ்திரேலிய அரசு சர்ச்சைக்குரிய சட்டமொன்றை முன்மொழிந்தது.

இது நடைமுறைக்கு வரும் பட்சத்தில் கூகுள், பேஸ்புக் போன்ற நிறுவனங்கள் அவுஸ்திரேலியாவின் செய்தி உள்ளடக்கங்களை பயன்படுத்துவதற்காக உள்ளூர் செய்தி நிறுவனங்களுடன் தமது வருமானத்தை பகிர வேண்டியிருக்கும். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாகவே பேஸ்புக் உள்ளூர், சர்வதேச செய்தி தளங்களுக்கு தனது பயனர்கள் நுழைய முடியாதவாறு தடை விதித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## அவுஸ்திரேலிய ஓப்பன்:

# இறுதியாட்டத்தில் நயோமி ஒஸாகா

மெல்பர்ன், பெப். 19

அவுஸ்திரேலிய ஓப்பனில் நேற்று நடந்த அரையிறுதியில் செரீனா வில்லியம்ஸை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு முன்னேறினார் நயோமி ஒஸாகா.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் மெல்பர்னில் நடக்கிறது. முதல் அரையிறுதியாட்டம் நேற்று காலை நடந்தது. இதில், அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், ஜப்பா னின் நயோமி ஒஸாகா மோதினர்.

ஒரு மணித்தியாலமும் 15 நிமிடங்களும் நீடித்த இந்த ஆட்டத்தில் 6-3, 6-4 என்ற செற் கணக்கில் செரீனாவை வீழ்த்தினார் ஒஸாகா. இந்த வெற்றியின் மூலம் நான்காவது தடவையாக கிராண்ட்ஸ்லம் இறுதிச் சுற்றுப் போட்டிக்கு முன்னேறியுள்ளார் ஒஸாகா.

தோல்வியால், 24ஆவது கிராண்ட்ஸ்லம் பட்டத்திற்காக மேலும் காத்திருக்க வேண்டிய நிலை செரீனாவுக்கு உருவாகியுள்ளது. இதை அவர் கைப்பற்றும் பட்சத்தில் அதிக கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்ற ஒரே வீராங்கனை என்ற பெருமையை செரீனா தன் வசமாக்குவார் என்பது குறிப்பிடத்தக்கது.




# ரூ. 39 கோடிக்கு மொரிஸை வாங்கியது ராஜஸ்தான் அணி

சென்னை, பெப். 19

தென்னாபிரிக்காவின் சகலதுறை வீரர் கிறிஸ் மொரிஸ் ஐ.பி.எல். வரலாற்றிலேயே அதிக தொகைக்கு ஏலம் எடுக்கப்பட்ட வெளிநாட்டு வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

இவரை 16.25 கோடி இந்திய ரூபா - நம் நாட்டு மதிப்பில் சுமார் 39 கோடி ரூபாவுக்கு ராஜஸ்தான் அணி வாங்கியுள்ளது.

ஐ.பி.எல். இருபது -20 போட்டிக்கான ஏலம் நேற்று சென்னையில் ஆரம்பமானது.

இதில், கிறிஸ் மொறிஸை வாங்குவதற்கு மும்பை, ராஜஸ்தான், பெங்களூர் அணிகள் கடும் போட்டி போட்டன. இறுதியில் ராஜஸ்தான் அணி அவரை வாங்கியது.

ஐ.பி.எல். வரலாற்றில் 16 கோடி இந்திய ரூபாவுக்கு 2015 ஆம் ஆண்டு யுவராஜ் சிங் வாங்கப்பட்டார். இதுவே வீரர் ஒருவரின் அதிக பட்சி தொகையாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டு வீரர் ஒருவர் இந்தளவு தொகைக்கு இதுவரை ஐ.பி.எல்லில் வாங்கப்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த ஆண்டு பெங்களூர் அணியால் 10 கோடி இந்திய ரூபாவுக்கு வாங்கப்பட்டிருந்தார். இம்முறை அவரின் அடிப்படை ஏலத் தொகை 75 இலட்சம் இந்திய ரூபா என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல்லில் இங்கிலாந்து வீரர்கள் விளையாடுவதை தடுக்க முடியாது

லண்டன், பெப். 19

ஐ.பி.எல். போட்டி பிரபலமாக உள்ளதால் அதில் விளையாடக் கூடாது என்று இங்கிலாந்து வீரர்களுக்கு உத்தரவிட முடியாது என்று இங்கிலாந்து தலைமைப் பயிற்சியாளர் கிறிஸ் சில்வர்வூட் கூறியுள்ளார்.

ஜூன் மாதம் இங்கிலாந்தில் நியூஸிலாந்து அணி டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இங்கிலாந்து வீரர்கள் ஐ.பி.எல்லில் விளையாடினால் டெஸ்ட் தொடரில் விளையாட முடியாத நிலை ஏற்படும். எனினும், ஐ.பி.எல்லில் இங்கிலாந்து வீரர்கள் விளையாடுவதற்கு இங்கிலாந்து அனுமதியளித்துள்ளது.

இந்நிலையில், அந்த அணியின் பயிற்சியாளர் கிறிஸ் சில்வர்வூட் கூறுகையில்,

ஐ.பி.எல். போட்டியில் விளையாடக்கூடாது என்று வீரர்களுக்கு கட்டளையிடுவது கடினமானதாகும். இதன் எண்ணிக்கையை பார்க்கும்போது வேண்டாம் எனச் சொல்ல முடியாது. இருபது -20 கிரிக்கெட்டில் ஐபிஎல் ஒரு பிரபலமான போட்டியாகும். எனவே அதில் விளையாடக் கூடாது எனக் கூற முடியாது.



இங்கிலாந்து வீரர்கள் ஐ.பி.எல்லில் விளையாடுவதால் இங்கிலாந்து அணியில் புதிய வீரர்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறது. ஐ.பி.எல். ஏலத்தில் மொயின் அலி உள்பட இங்கிலாந்து வீரர்கள் தெரிவானால் மகிழ்ச்சியே. இதனால் இந்தியச் சூழல் பற்றி அவர்கள் கற்றறிந்து, ஒரு வீரராக முன்னேற்றம் அடைவார்கள் - என்றார். (ஐ)

# ரூ. 35 கோடிக்கு மக்ஸ்வெல்லை விலைக்கு வாங்கியது பெங்களூர்



சென்னை, பெப். 19

அவுஸ்திரேலியாவின் அதிரடி வீரர் மக்ஸ்வெல்லை 14.25 கோடி இந்திய ரூபாவுக்கு - நம் நாட்டு மதிப்பில் 35.6 கோடி ரூபாவுக்கு ஏலத்தில் எடுத்தது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி.

நடப்பு ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடருக்கான சிறு ஏலம் சென்னையில் நேற்று நடந்தது.

இதில், அவுஸ்திரேலியாவின் அதிரடி ஆட்டக்காரரும் சகலதுறை வீரருமான மக்ஸ்வெல் அடிப்படை ஏலத் தொகையான 2 கோடி இந்திய ரூபாவுக்கு ஏலத்தில் விடப்பட்டார்.

மக்ஸ்வெல்லை அறிவித்த உடனேயே 3 கோடி இந்திய ரூபாவுக்கு கொல்கத்தா அணி ஏலம் கேட்டது. ஆனால், அதற்குள் பெங்களூர் அணி நுழைந்து, மக்ஸ்வெலுக்கு ரூ.4 கோடி விலை வைத்தது. ஆனால், கொல்கத்தா அணி விடாமல் ரூ.4.40 கோடிக்கு கேட்டது.

இதைத் தொடர்ந்து உள்நுழைந்த சென்னை சுப்பர் கிங்ஸ் 5.50 கோடி ரூபாவுக்கு கேட்டது. பெங்களூர் விடாது துரத்தியது. இறுதியில் சென்னை அணி ரூ. 10 கோடியை நிர்ணயித்தது.

பதிலுக்கு பெங்களூர் 11.25 கோடி ரூபாவை கேட்டது. தொடர்ந்து இரு அணிகளும் விலையை அதிகரித்தன. இறுதியில் 14.25 கோடி ரூபாவுக்கு பெங்களூர் அணி வாங்கியது.

# 100 பந்து கிரிக்கெட்டில் 18 இலங்கை வீரர்கள்!



லண்டன், பெப். 19

இங்கிலாந்து அறிமுகப்படுத்தியுள்ள 'தி ஹண்ட்ரட்"' எனப்படும் 100 பந்துகள் கிரிக்கட் தொடரின் 2021 ஏலத்திற்காக 252 வெளிநாட்டு வீரர்களும் 254 உள்நாட்டு வீரர்களும் பதிவு செய்துள்ளனர் என்று இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கட் சபை தெரிவித்துள்ளது.

பெப்ரவரி 23ஆம் திகதி இடம்பெறவுள்ள இந்த வீரர்கள் ஏலத்தில் மொத்தமாக 7 வெளிநாட்டு வீரர்கள் உட்பட 35 வீரர்கள் மாத்திரமே தெரிவு செய்யப்படவுள்ளனர். இந்நிலையில் இந்த இடங்களுக்காக 18 இலங்கை வீரர்கள் பதிவு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் பதிவு செய்துள்ள வீரர்களின் விவரம் பின்வருமாறு

**நிர்ணயத்தொகை +40,000 பிரிவு**

தனஞ்சய டி சில்வா, நிரோஷன் டிக்வெல்ல, குசல் பெரேரா, திசர பெரேரா, இசுரு உதான

**நிர்ணயத்தொகை +32,000 பிரிவு**

திக்ஷில டி சில்வா, லசித். எம்புல்தெனிய

**ஏலத்தொகை நிர்ணயிக்கப்படாத வீரர்கள்:**

வனிந்து ஹசரங்க டி சில்வா, அகில தனஞ்சய, அவிஷ்க பெர்னாண்டோ, அசேல குணரத்ன, தனுஷ்க குணதிலக, லஹிரு குமார, குசல் மெண்டிஸ், பானுக ராஜபக்ஷ, தசுன் ஷானக, லஹிரு திரிமன்னே, திலன் வல்லலவிட.

# போதையில் சாரத்தியம் ஒரு லட்சம் பேர் கைது

## அஜித் ரோஹண தகவல்



கொழும்பு,பெப்.19

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் கடந்த ஒன்றரை வருட காலப் பகுதிக்குள் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோரும், போக்குவரத்து ஒழுங்கு விதிகளை மீறியமை தொடர்பில் மூன்று இலட்சத்துக்கும் அதிகமானோரும் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை நேற்று முன்தினம் இடம்பெற்ற 3 விபத்துக்களில் மூவர் உயிரிழந்தனர். இம்மாதம் 7 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 23 விபத்துக்கள் இடம்பெற்றன. இவற்றில் 23 பேர் உயிரிழந்தனர். மேலும் 286 பேர் காயமடைந்ததோடு மொத்தமாக 430 விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

கடந்த ஒன்றரை வருட காலப் பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திய ஒரு இலட்சத்து 3010 பேர் கைது செய்யப்பட்டனர். அநுராதபுரம் மாவட்டத்திலிருந்தே அதிகளவானோர் கைது செய்யப்பட்டனர்.

இம்மாவட்டத்தில் 6,690 பேர் கைது செய்யப்பட்டனர். அதற்கு அடுத்தபடியாக ஹற்றனில் 4,992 பேரும், குருநாகலில் 3,681 பேரும் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பஸ் ஒழுங்கை தொடர்பில் விஷேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. கடந்த ஒன்றரை வருட காலத்தில் சரியான ஒழுங்கையில் பயணிக்காமை மற்றும் அநாவசியமாக முந்திச் செல்லல் உள்ளிட்ட ஒழுங்கு விதிகளை மீறிய மூன்று இலட்சத்து 95 ஆயிரத்து 325 பேர் கைது செய்யப்பட்டனர்.

நுகேகொடை, குருநாகல், மட்டக்களப்பு மற்றும் இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களிலேயே அதிகளவானோர் கைது செய்யப்பட்டனர்.

போக்குவரத்து தொடர்பான விஷேட கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. முடிந்தவரை விபத்துக்களைத் தவிர்ப்பதே இதன் பிரதான இலக்காகும்- என்றார். (எ)

# இலங்கையில் பா.ஜ.கவை ஒருபோதும் ஏற்கமுடியாது

## சிங்கள ராவய சீற்றம்



கொழும்பு,பெப்.19

**அரசியல் நோக்கங்களுடன் இலங்கையில் பாரதிய ஜனதா கட்சி கிளையை ஸ்தாபிக்க முயற்சிக்கப்படுமாயின் அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என சிங்கள ராவய அமைப்பின் பொதுச்செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் தெரிவித்துள்ளார்.**

பாரதிய ஜனதா கட்சியின் அறிவிப்பு தொடர்பில் வினவிய போது அவர் மேலும் கூறியதாவது, இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதா கட்சி அரசியல் நோக்கங்களுடன் இலங்கையில் அதன் கிளையொன்றை ஸ்தாபிக்க முடியாது. அதற்கு நாம் முழுமையான எதிர்ப்பை வெளியிடும் அதேவேளை, அத்தகைய செயல்பாடு இடம்பெறும் பட்சத்தில் நாட்டின் சுயாதீனத்தன்மையும், இறையாண்மையும் வெகுவாகப் பாதிப்படையும். எனவே இந்நாட்டின் பௌத்த பிக்குகள் என்ற அடிப்படையில் அதனை நாம் முழுமையாக எதிர்க்கின்றோம்.

இலங்கையில் சீனா, ஜப்பான் போன்ற நாடுகள் முதலீடுகளைச் செய்கின்றன. அதேபோன்று அபிவிருத்தி செயல் திட்டங்களில் தமது பங்களிப்பை வழங்குகின்றன. எனினும் அந்நாட்டிலுள்ள கட்சியொன்றை இங்கு ஸ்தாபிப்பதற்கு அவை முற்படவில்லை. அத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளுமாயின் அதனை எம்மால் அனுமதிக்கவும் முடியாது. அதேபோன்று இந்தியாவும் எமது நாட்டில் முதலீடு மற்றும் வர்த்தகம் ஆகிய செயல்பாடுகளில் ஈடுபடமுடியும். எனினும் உள்நாட்டு அரசியலில் தலையீடு செய்யும் நோக்கத்துடன் அரசியல் கட்சியொன்றை ஆரம்பிப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என உறுதிபடத் தெரிவித்தார். (எ)

# வீதியைக் கடக்க முயன்ற பெண் லொறி மோதி பலி

வத்தளை,பெப்.19

வத்தளையில் இடம்பெற்ற வீதி விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்தார்.

நேற்றுக் காலை வீதிக் கடவையில், வீதியைக் கடக்க முற்பட்டபோது, எதிரே வந்த லொறி மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

இதன்போது காயமடைந்த பெண், கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

வத்தளை பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான சசிகலா ஜெயதீஸ்வரன் என்ற ஆசிரியையே இந்த விபத்தில் உயிரிழந்தார். இவ்விபத்து தொடர்பில் லொறிச் சாரதி கைது செய்யப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளை வத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# அபிவிருத்தி திட்டங்கள் பற்றி விளக்கமளிக்க தேசிய அபிவிருத்தி ஊடக மத்திய நிலையம்

கொழும்பு,பெப்.19

அரசாங்கத்தின் பெரும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி மக்களுக்கு விளக்கமளிப்பதற்கு தேசிய அபிவிருத்தி ஊடக மத்திய நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது என ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஊடக அமைச்சில் தேசிய அபிவிருத்தி தொடர்பான ஊடக மத்திய நிலையத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை செயல்பட்ட தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம், யுத்தத்தை வெற்றி கொள்வதற்காக உயர் பங்களிப்பை வழங்கியிருந்தது. இதன் மூலம் தேசிய மற்றும் சர்வதேச சமூகத்துக்கு சரியான தகவல்களை வழங்குவதற்காக வாய்ப்பு கிடைத்தது.

இதேவேளை, எதிர்வரும் ஏப்ரல், மே மாதங்களில் நாட்டின் சகல பிரஜைகளுக்கும் தடுப்பூசியை வழங்குவது பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. அத்துடன் கொரோனாவால் வீழ்ச்சியடைந்த சுற்றுலாத்துறை, வெளிநாட்டு வேலை வாய்ப்பு, ஆடை உற்பத்தி போன்ற துறைகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்கள் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய இடம்பெறுகின்றன.

பொது மக்களுக்கும், அரச நிர்வாகத்துக்கும் இடையிலான தொடர்பை உயர்நிலையில் பேணும் நோக்குடன் இந்த மத்திய நிலையம் உருவாக்கப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், நாட்டின் அபிவிருத்தி பற்றி மக்களுக்கு விளக்கமளிக்க அனைத்து ஊடகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் இந்த நிலையம் உதவுவதாகவும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் ஜகத் பி விஜேவீர தெரிவித்தார். அத்துடன் தேசிய அபிவிருத்தி ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளராக மிலிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார். (எ)

# குற்ற விசாரணை பிரிவு எனக்கூறி இரண்டு விகாரைகளில் கொள்ளை

கொழும்பு,பெப்.19

கதிர்காமம் மற்றும் அவுங்கல்ல பிரதேசங்களில் தம்மைக் குற்ற விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் என அடையாளப்படுத்திக் கொண்டு இரண்டு விகாரைகளில் சிலர் கொள்ளையிட்டுள்ளனர். இவ்வாறு திட்டமிட்டு கொள்ளையடிக்கும் நபர்கள் தொடர்பில் பொது மக்கள் அவதானமாகச் செயல்பட வேண்டும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கதிர்காமத்திலுள்ள விகாரையொன்றுக்கு நேற்று முன்தினம் நண்பகல் சென்ற இருவர் தம்மை கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் என்று அடையாளப்படுத்திக் கொண்டு, அந்த விகாரையின் விகாராதிபதியை அச்சுறுத்தி கையடக்க தொலைபேசி மற்றும் பெறுமதி மிக்க புத்தர் சிலையொன்றையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இதேபோன்று புதன்கிழமை இரவு 7 மணியளவில் அவுங்கல்ல பொலிஸ் பிரிவில் பலப்பிட்டி - பத்தேகமை விகாரைக்கு சென்ற குழுவொன்று தம்மை மேல் மாகாண குற்ற விசாரணைப் பிரிவினர் என்று அடையாளப்படுத்திக் கொண்டு, அந்த விகாரையின் விகாராதிபதியிடம் பணத்தைக் கொள்ளையிட முயற்சித்து பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். (எ)

# மரண அறிவித்தல்

மலர்வு 10 - 11 - 1958



உதிர்வு 17 - 02 - 2021

## லயன் கதிரவேல் கமலேஸ்வரன்

**(ஓய்வுநிலை பிரதம கணக்காளர்)**

துன்னாலையைப் பிறப்பிடமாகவும் அல்வாயூரை வசிப்பிடமாகவும் கொண்ட லயன் கதிரவேல் கமலேஸ்வரன் அவர்கள் (17.02.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேல் – தவமணி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற கந்தப்பு – பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திரவதனாவின் அன்புக் கணவரும், பிறேம் கமல் சந்தர் (யாழ்/பரியோவான் கல்லூரி, உயிரியல் பிரிவு உயர்தரம்) அவர்களின் பாசமிகு தந்தையாரும், பா.கமலேஸ்வரி, B.தவனேஸ்வரன் (யாழ்.போதனா வைத்தியசாலை), B.மகேஸ்வரன் (யா/சென் ஜேம்ஸ் மகளீர் கல்லூரி, ஆசிரியர்), ச.ரேவதி, க.சிவனேஸ்வரன் (சுவிஸ்), அமரர் க.கவந்தீசன் அவர்களின் பாசமிகு சகோதரரும், அமரர் க.பாலச்சந்திரன் (UK) மற்றும் க.சந்திரமாலா, அமரர் பிறேமச்சந்திரன் அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சந்திரமகால், வதிரியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நேற்று பி.ப 4.00 மணியளவில் அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**சந்திரமகால், வதிரி.**

**தகவல்: பிறேம் கமல் சந்தர்**
0776047195, 773796175

# ஊழியர்களின் போராட்டத்தால் நகர சபை கூட்டத்தில் குழப்பம்!

வவுனியா, பெப். 19

தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று கூறி வவுனியா நகரசபை ஊழியர்கள் சிலர் போராட்டம் ஒன்றை முன்னெடுத்து வருகின்றனர். இதனால், நேற்று இடம்பெற்ற நகர சபை அமர்வில் குழப்பம் ஏற்பட்டது.

தவிசாளர் கௌதமன் தலைமையில் இடம்பெற்ற அமர்வில், இறம்பைக்குளம் வட்டார உறுப்பினர் சலிஸ்டன், போராட்டம் மேற்கொள்ளும் ஊழியர்களை வேலையால் நிறுத்தியமை அநியாயமான செயல். நகரசபைக்கு அது அழகில்லை. அந்த ஊழியர்களுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று கூறினார்.

இதன்போது பேசிய உறுப்பினர் மோகன், இது தேவையற்ற போராட்டம். உறுப்பினர்களை அவமானப்படுத்திவிட்டு, அரசியல் கட்சிகளுடன் இணைந்து அவர்கள் இப்போது போராடுகின்றனர். அவர்களுக்கு பல வாய்ப்புகள் வழங்கியும் ஒத்துழைக்காமையாலேயே இந்தப் பிரச்னை வளர்ந்தது - என்றார். இதே குற்றச்சாட்டை வேறு சிலரும் முன்வைத்தனர்.

இதைத் தொடர்ந்து, தவிசாளர் கௌதமனும் கருத்து வெளியிட்டார். இதையடுத்து உறுப்பினர் சலிஸ்டனும் தவிசாளரும் கடுமையாக முரண்பட்டனர்.

இதன்போது, சபையின் செயலாளர் சட்டத்துக்கு உட்பட்டே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. மனிதாபிமான அடிப்படையில் முன்னர் நால்வருக்கு வேலை வழங்கப்பட்டது என்று கூறினார்.

இதைத் தொடர்ந்தும், நீண்ட விவாதம் சபையில் இடம்பெற்றது. இதைத் தொடர்ந்து போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடி பிரச்னைக்கு தீர்வு காணத் தீர்மானிக்கப்பட்டது.

# யாழ். நூலகத்தை பார்வையிட்டார் சுவிற்சர்லாந்தின் இலங்கை தூதுவர்

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ்ப்பாணம் வந்த சுவிஸ் தூதுவர் முன்னர் எரியூட்டப்பட்டு, மீளவும் 2004 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்ட யாழ். பொது நூலகத்தை பார்வையிட்டார். அத்துடன், யாழ். மாநகர முதல்வரையும் சந்தித்துப் பேசினார்.

இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் டொமினிக் பேர்கலர் விசேட பயணமாக யாழ்ப்பாணம் வந்துள்ளார். தொடர்ச்சியாக பல தரப்பினரையும் சந்தித்து வருகிறார்.

இதன் ஓர் அங்கமாக நேற்றைய தினம், பெரும்பான்மை இனத்தவர்களால் கடந்த 1981 ஆம் ஆண்டு எரியூட்டப்பட்டு - 2004 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்ட யாழ். பொது நூலகத்தையும் சுவிஸ் தூதுவர் பார்வையிட்டார். இங்கேயே, யாழ். மாநகர மேயரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் யாழ். மாநகர சபையின் ஆணையாளர், பொது நூலகத்தின் பிரதம நூலகர் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர். (ஐ-3)

# மாகாண சபை என்ற அரும் வாய்ப்பை விக்னேஸ்வரன் தவறவிட்டுவிட்டார்!

## சுவிஸ் தூதுவரிடம் கூறியது ஈ.பி.டி.பி.



யாழ்ப்பாணம், பெப். 19

**இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் கிடைத்த மாகாண சபை என்ற அருமையான வாய்ப்பை விக்னேஸ்வரனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தவறவிட்டனர். இதுவே தற்போது மாகாண சபை பற்றிய விமர்சனத்திற்கு காரணமாகியுள்ளது.**

இவ்வாறு சுவிஸ் தூதுவர் டொமினிக் பேர்கலரிடம் கூறினர் ஈ.பி.டி.பி. கட்சியை சேர்ந்த சி. தவராசாவும் யோகேஸ்வரி பற்குணராஜாவும்.

நேற்றைய தினம் சுவிஸ் தூதுவர் கடற்றொழில் அமைச்சரும் ஈ.பி.டி.பி. கட்சியின் பொதுச் செயலருமான டக்ளஸ் தேவானந்தாவின் பிரதிநிதிகளான இவர்களை சந்தித்துப் பேசினார்.

ஈ.பி.டி.பி. கட்சியின் தலைமை அலுவலகமான ஸ்ரீதர் தியேட்டரில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, '13ஆவது திருத்தச் சட்டம் ஏற்படுத்தப்பட்டு ஏறத்தாழ 27 வருடங்களுக்கு பின்னரே வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடந்தன. இந்த இடைவெளியால் மாகாண சபைக்கான அதிகார ஏற்பாடுகள் சில மத்திமப்படுத்தப்பட நேரிட்டது. ஆனாலும், இதை மாற்றியமைக்க தமிழ் மக்களுக்கு சிறந்த சந்தர்ப்பம் 2013 ஆம் ஆண்டு நீதியரசர் விக்னேஸ்வரனுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கும் கிடைத்தது. மக்களை உசுப்பேற்றி வாக்குகளை அபகரித்து மாகாண சபையை கைப்பற்றியிருந்தனர். ஆனால், எதையும் செய்யாது காலத்தை வீணடித்து விட்டு, இன்று கதையளந்து வருகின்றனர்.

'சுவிஸ் அரசு கூட மாகாணசபை நியதிச் சட்டங்களை ஆக்கச் சொல்லி நிதியுதவியும் வழங்கியிருந்தது. நான் எதிர்க் கட்சி தலைவராக இருந்த போதிலும் அதை முன்னெடுக்க சொல்லி பல தடவைகள் வலியுறுத்தியிருந்தேன். ஆனாலும், நீதியரசர் விக்கினேஸ்வரன் அதில் எந்தவித அக்கறையும் காட்டவில்லை. 13 இல் இருக்கும் இவ்வாறான பலவற்றை நடைமுறைப்படுத்தியிருந்தால், இன்று இவ்வாறான பிரச்னைகள் ஏற்பட்டிருக்காது. ஆனால், இன்று நாம் நீதியரசர் விட்ட அந்த குறைகளையும் சேர்த்தே முன்னெடுக்க வேண்டியுள்ளது.

எது எவ்வாறானாலும் நாட்டில் அனைவரும் பேதங்களற்றவகையில் சமாதானமாகவும் சமத்துவமாகவும் வாழவேண்டும் என்பதிலேயே நாம் அக்கறை கொள்ளவேண்டும். நாட்டில் மக்கள் அனைவரும் சமாதானமாக ஐக்கியத்துடன் வாழவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. இறுதியாக கிடைத்த பொன்னான வாய்ப்பை வடக்கு மாகாண சபையின் 5 வருடங்களை நீதியரசர் விக்னேஸ்வரன் இழக்கச் செய்துவிட்டார்.

'ஆனால், 13 ஆவது திருத்த சட்டமே சிறந்து என்றும் அதை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றே எமது கட்சியின் பொதுச் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா இன்று வரை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றார் - என்று ஈ.பி.டி.பி. கட்சியினர் தெரிவித்தனர். (ஐ)



# ரூ. 2 கோடி பெறுமதியான கஞ்சா கைப்பற்றப்பட்டது

கொழும்பு, பெப். 19

*யால சரணாலயத்தில் இருந்து 2 கோடி ரூபாவிற்கும் அதிக பெறுமதியான கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.*

*30 மூடைகளில் பொதியிடப்பட்டிருந்த 350 கிலோகிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டதாக ஊவா மாகாண வன ஜீவராசிகள் திணைக்கள உதவி பணிப்பாளர் உபுல் இந்திரஜித் தெரிவித்தார்.*

*விற்பனை செய்ய தயாராகியிருந்த போதே கஞ்சா கைப்பற்றப்பட்டதாக உபுல் இந்திரஜித் குறிப்பிட்டார்.*

# கந்தபுராண படனம்

யாழ்ப்பாணம், பெப். 19

வட்டுக்கோட்டை கண்காம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணி பூசையை தொடர்ந்து கந்தபுராண படிப்பு இடம்பெற உள்ளது.

இந்த நிகழ்வில் சுகாதார விதிகளை பின்பற்றி பக்தர்களை பங்கேற்குமாறு ஆலய நிர்வாகம் கேட்டுள்ளது. (ஐ)



அம்பாந்தோட்டை மாவட்டத்தின் திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் 127 அடி உயரமான தாமரை வடிவ கோபுரமும் அதன் மேல் அமைக்கப்பட்ட புத்தர் சிலையும் நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்டது. இதற்கு 'நல்லெண்ண தாமரை புத்தர் கோபுரம்" என்று பெயரிடப்படுள்ளது.

## பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில்

# கன்ரீன், வாகன பாதுகாப்பு நிலையம் இயங்காமையால் நோயாளர் சிரமம்!

வடமராட்சி, பெப். 19

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிற்றுண்டிச் சாலையும், சைக்கிள் பாதுகாப்பு நிலையமும் கடந்த சுமார் 3 வாரங்களாக இயங்கவில்லை. இதனால் மருத்துவமனைக்கு வரும் நோயாளர்கள், பார்வையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது:

சிற்றுண்டிச் சாலையினதும், சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தினதும் ஒப்பந்த காலம் கடந்த ஜனவரி 31ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. இவற்றை புதிய ஒப்பந்தகாரர்களிடம் வழங்குவதற்காக கேள்வி விண்ணப்பம் கோரப்பட்டது.

ஆனால், அதிக தொகை காரணமாக எவரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை என்று தெரிய வருகின்றது. இதைத் தொடர்ந்து மீண்டும் ஒருமுறை விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இது தொடர்பான முடிவு நேற்று வரை வெளியிடப்படவில்லை.

இந்நிலையில், சிற்றுண்டிச் சாலையும், சைக்கிள் பாதுகாப்பு நிலையமும் இயங்காமையால் நோயாளர்களும், பார்வையாளர்களும் அதிக சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக சிற்றுண்டிச் சாலை இயங்காமையால் சுடுநீர் பெறுவதற்காக நோயாளர்கள் வைத்தியசாலைக்கு வெளியிலுள்ள உணவகங்களை நாட வேண்டியுள்ளது.

சைக்கிள் பாதுகாப்பு நிலையமும் தொடர்ந்தும் மூடப்பட்டிருப்பதால் நோயாளர்களும் பார்வையாளர்களும் வாகனங்களை வீதியிலேயே நிறுத்துகிறார்கள். இதனால், போக்குவரத்தும் பாதிக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

எனவே, நோயாளர்கள், பார்வையாளர்களின் நலன் கருதி இந்த விடயத்தில் உடனடி நடவடிக்கையை வைத்தியசாலை நிர்வாகம் எடுக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. (ஐ-2)

ஈழநாடு
Eelanadu

# தடுப்பூசி பெற்றவர்களுக்கும் கொரோனா தொற்று உறுதி!



ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ராஜெனெகாவின் இந்திய தயாரிப்பான கோவிஷீல்ட் தடுப்பூசி பெற்றுக் கொண்ட ஒருசிலர் அதன் பின்னர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி

கொழும்பு, பெப். 19

**கொவிட் -19 தடுப்பூசி பெற்ற சிலருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று பதில் சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜெயசுமன தெரிவித்தார்.**

யுள்ளனர் என்று அமைச்சுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டவர்கள் காலி மற்றும் கேகாலை மாவட்டங்களை சேர்ந்தவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

தடுப்பூசி பெற்ற மூன்று வாரங்களின் பின்னரும் உடலில் கொரோனாவுக்கு எதிராக எதிர்ப்பு சக்தி உருவாகவில்லை. இது தடுப்பூசி மூலம் மட்டும் வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை உணர்த்தியுள்ளது.

எனவே, கொவிட் தடுப்பூசி பெற்றாலும் கூட சுகாதார வழிகாட்டுதல்களை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் - என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)



## சமல் ராஜபக்ஷவின் வசம் மேலும் இரு அமைச்சுகள்

கொழும்பு, பெப். 19

நீர்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் சமல் ராஜபக்ஷவிடம் மேலும் இரு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு, அனர்த்த முகாமைத்துவம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சுகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்றைய தினம் அவரிடம் வழங்கினார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் இந்தப் பதவிகளை அவர் பொறுப்பேற்றார். (ஐ)



## கொண்டைமடு மக்களின் குறைகளை கூட்டமைப்பு எம்.பிகள் கேட்டறிந்தனர்

முல்லைத்தீவு, பெப். 19

முல்லைத்தீவு - வற்றாப்பளை - கொண்டைமடு பிரதேச விவசாயிகளின் பிரச்னைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், இ. சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் நேரில் சென்று கேட்டறிந்தனர்.

அந்தப் பிரதேச மக்களின் அழைப்பின் பேரில் நேற்று வியாழக்கிழமை அங்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களின் குறைகளை கேட்டறிந்தனர்.

இந்தப் பகுதியில் வயல் நிலங்கள் வனவள திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்படுகின்றன என்று அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், வீதிகள் புனரமைப்பு, நீர்ப்பாசன வசதிகள் உள்ளிட்ட பிரச்னைகள் தொடர்பில் ஆராயப்பட்டு அவற்றுக்கு தீர்வுகளை பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இச் சந்திப்பில் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன், முள்ளியவளை கமநல சேவைகள் நிலையத்தின் பெரும்போக உத்தியோகத்தர் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## மத்தியவங்கி பிணைமுறி மோசடி: விசாரிக்க இரு தீர்ப்பாயங்கள்!

கொழும்பு, பெப். 19

மத்திய வங்கியில் இடம்பெற்றதாக கூறப்படும் பிணைமுறி மோசடி குறித்து விசாரணை செய்ய தலா மூன்று நீதிபதிகள் கொண்ட இரு குழுக்களை பிரதம நீதியரசர் ஜெயந்த ஜெயசூரிய நியமித்துள்ளார்.

2016 மார்ச் மாதம் இடம்பெற்ற மத்திய வங்கியின் பிணை முறி மோசடி வழக்குகள் குறித்து விசாரணைகளை முன்னெடுக்க, சட்டமா அதிபரின் கோரிக்கைக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதிகளான டி.தொடவத்த, எம். இர்ஷதீன் மற்றும் மஞ்சுள திலகரட்ண ஆகியோர் அடங்கிய ஒரு குழுவில் உள்ளனர்.

மற்றைய குழுவில் மேல் நீதிமன்ற நீதியரசர் அமல் ரணராஜா, நாமல் பலல்லே மற்றும் ஆதித்ய படபெந்திகே ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## பொத்துவில் - பொலிகண்டி பேரணி: யோகேஸ்வரனிடமும் விசாரணை!



மட்டக்களப்பு, பெப். 19

நீதிமன்ற உத்தரவை மீறி, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணியில் கலந்து கொண்டேன் என்று கூறி மட்டக்களப்பு பொலிஸார் தம்மிடம் விசாரணைகளை மேற்கொண்டனர் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'எமது அலுவலகத்துக்கு வருகை தந்த மட்டக்களப்பு பொலிஸ் உத்தியோகத்தரால், முல்லைத்தீவின் மாங்குளம் பொலிஸ் பிரிவினரால், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணிக்கு கடந்த 6ஆம் திகதியன்று தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு, நீதிமன்றக் கட்டளை எனக்கு வழங்கப்பட்டது என்றும் ஆனால், நான் அதனை மீறி அந்தப் பேரணியில் கலந்துகொண்ட ஒளிப்பதிவுகள் தங்களிடம் உள்ளன எனவும் கூறி என்னிடம் வாக்குமூலம் கோரினர்.

அதற்கு பதிலளித்த நான் "இந்த நாடு ஜனநாயக நாடு. எனக்கிருக்கும் ஜனநாயக உரிமைகளின் அடிப்படையில் இவ்வாறான சாத்வீகப் போராட்டங்களில் நான் கலந்துகொள்ளச் சென்றது உண்மைதான். ஆனால், மாங்குளம் பொலிஸார், மாங்குளம் ரயில் கடவையை அண்மித்ததாக வைத்து நான் மட்டுமே வந்த எனது வாகனத்தை மறித்து, அந்த நீதிமன்றக் கட்டளையை வழங்கினார்கள்.

அதனை வழங்கிய பின், எனது பெயர் அக்கட்டளைப் பத்திரத்தில் சுட்டிக்காட்டப்படாவிடினும்கூட, நீதிமன்றத்தின் கௌரவத் தன்மையை மதித்து, தொடர்ந்து அப்பேரணியில் செல்வதை நிறுத்திக் கொண்டு, நான் மட்டக்களப்புக்கு திரும்பிவிட்டேன் என்று தெளிவுபடுத்தினேன்" - என்றார். (ஐ)

### திருகோணமலை மாவட்டத்தில்

## டெங்கு நோய் காரணமாக ஏழு வயது சிறுமி மரணம்

திருமலை, பெப். 19

திருகோணமலை -கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட பெரியாற்றுமுனை பகுதியில் டெங்கு காய்ச்சல் காரணமாக 7 வயது சிறுமி நேற்று காலை உயிரிழந்துள்ளார்.

கிண்ணியா பெண்கள் மகளிர் கல்லூரியில் இரண்டாம் தரத்தில் கல்வி பயின்று வரும் கிஷோர் ஷம்ஹா மரியம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

2 நாட்கள் காய்ச்சல் காரணமாக கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டும் சிகிச்சை பலனின்றி நேற்று காலை உயிரிழந்துள்ளதாகவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

## நீதிமன்றத்துக்குப் பூட்டு

கொழும்பு, பெப். 19

கெஸ்பேவ நீதிமன்றத்தில் பணிப்புரியும் சட்டத்தரணி ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதால், நீதிமன்றப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எனினும் அவசர, அத்தியாவசிய சேவைகளுக்காக சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களுக்கு அமைய நீதிமன்றப் பணிகளை முன்னெடுக்கவும் பொதுசுகாதாரப் பரிசோதகர்கள் அனுமதி வழங்கியுள்ளனர்.



## கொரோனாவால் 3 நாட்களில் நாட்டில் 25 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 19

கொரோனா வைரஸால் நாட்டில் கடந்துள்ள மூன்று நாட்களில் மாத்திரம் 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், கொரோனா வைரஸ் தாக்கத்தின் 2ஆவது அலையால் கடந்த ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் நேற்றுவரை 409 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொரோனா முதலாவது அலையின்போது 13 பேர் மாத்திரமே உயிரிழந்தனர். இதன்படி கொரோனாவால் இதுவரை மொத்தமாக 409 பேர் உயிரிழந்துள்ளனர். நேற்று மாத்திரம் 13 உயிரிழப்பு சம்பவங்கள் பதிவாகின. (அ)



# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. F.X.அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை - நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை
1.00 மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10



**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - மாற்றுத்திறனாளிகள்



10.00 மணி : யாவரும் கேளீர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் தமிழ்

**இரவு**
7.00 மணி : க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு
மாதிரி வினாத்தாள் ஆங்கிலம்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் அளவெட்டி
அழகொல்லை விநாயகர் ஆலயம்
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் விஸ்வலிங்க மஹா கணபதி ஆலயம் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
08.00 மணி : யாழ்ப்பாணம் அளவெட்டி
அழகொல்லை விநாயகர் ஆலயம்

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
9.00 மணி : ஜெபமாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.02.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.